விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: எட்டு








சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 01 செவ்வாய்க்கிழமை (17.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210


## இந்து கலாசார அமைச்சுப் பணிப்பாளரின் வாகனம் ஆயுததாரிகளால் கடத்தல்

### சாரதி சுட்டுக்கொலை

(கொழும்பு)

வட மாகாண சபையின் பிரதம செயலாளரும் முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருமாகிய எஸ். ரங்கராஜனின் தாயாரது மரண வீட்டுக்குச் சென்ற இந்து கலாசார அமைச்சுப் பணிப்பாளரின் வாகனம் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் ஞாயிறன்று கடத்தப்பட்டு சாரதி அன்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பண்டாரிக் குளத்தில் வசித்து வந்த வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரின் தாயார் மரணமடைந்ததை யடுத்து அவரது (08 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கடற்படையின் ஆலோசகர் யாழ்ப்பாணத்திற்கு இரகசிய விஜயம்

(கொழும்பு)

யாழ்.காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராய்வதற்காக இந்திய கடற்படை ஆலோசகர் கப்டன் பிரசாத் சிங் யாழ்.குடாநாட்டுக்கான விஜயமொன்றை இரகசியமாக மேற்கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை விமானம் மூலம் பலாலி கூட்டுத்தளம் வந்தடைந்த இவர் காங்கேசன்துறை கடற்படைத் தளம் மற்றும் துறைமுக அபிவிருத்தி தொடர்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறியுடன் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தி தொடர்பிலும் அவர் ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கிழக்கு மாகாண பிரதம செயலாளர் நேற்று மாலை சுட்டுப்படுகொலை

## அலுவலகத்தில் இருந்தபோது சம்பவம்

(திருகோணமலை)

**கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஹேரத் அபயவீர நேற்று மாலை இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.**

**திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாணசபை அலுவலகத்தில் அவர் கடமையில் இருந்தபோது இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.** (08 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஒழிக்க ஈரானும் இணைந்து செயற்படும்

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு ஈரான் அரசு இலங்கை அரசுடன் இணைந்திருப்பதாக ஈரானின் மதத் தலைவரின் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடி போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க ஜனா

## ரணில்-கருணாநிதி ஓகஸ்டில் சந்திப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமாகிய ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதிக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெறவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இவ்விருவருக்கும் இடையிலான இந்த முக்கியமான சந்திப்பு ஆகஸ்ட மாதம் முதல் வாரத்தில் தமிழகத்தில் இடம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் அதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளை தமிழக அரசாங்க முக்கியஸ்தர்கள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விருவருக்கும் இடையில் ஆகஸ்ட் மாதம் முதல் (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்களால் புலிகளுக்கு உதவி இந்.கடற்படையிடம் இலங்கை முறையீடு

(கொழும்பு)

தமிழக மீனவர்களின் படகுகள் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கடத்துகின்றனர் என்று இந்திய கடற்படையிடம் இலங்கை கடற்படை முறையீடு செய்துள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் ஊடகம் வெளியிட்ட செய்தி வருமாறு, தமிழக மீனவர்க இருதரப்பினரும் ஆராய்ந்தனர்.

இந்தியாவிடம் இருந்து இலங்கையினால் கொள்வனவு செய்யப்பட்ட சுற்றுக்காவல் கலமான சயூராவில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் வட பகுதி கடற்படை கட்டளைத் தளபதி எஸ்.ஆர்.சமரதுங்க, கொமார்டோ வான் ஹெரால்டென், தமிழக கடற்படை அதிகாரி தலைமையிலான குழுவினர் இச்

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு ஈரான் அரசு இலங்கை அரசுடன் இணைந்திருப்பதாக ஈரானின் மதத் தலைவரின் விசேட பிரதிநிதி அயதுல்லா மொஹமட் அல்டசரினி தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடி போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்படுவது போலவே ஈரானிய அரசும் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (சு)

துள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் ஊடகம் வெளியிட்ட செய்தி வருமாறு, தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை விடுதலைப்புலிகள் பயன்படுத்துவதை தடுப்பது குறித்து இலங்கையின் வட பகுதி கடற்படை கட்டளைத் தளபதி எஸ்.ஆர்.சமரதுங்க, கொமாண்டோ வான் ஹெரால்டென்,தமிழக கடற்படை அதிகாரி தலைமையிலான குழுவினர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.இரு தரப்பு ஒத்துழைப்புக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் விவகாரம் பிரதமருக்கு வை.கோ.கடிதம்

(சென்னை)

இந்திய-இலங்கை கடற்படைகளுக்கு இடையே உள்ள தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கையை கைவிடவேண்டும் என்று பிரதமருக்கு வை.கோ.எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வை.கோ.எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது; யூலை 13 ஆம் திகதி இந்திய-இலங்கை கடற்படை உயர் அதிகாரிகள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னோடி வினாத்தாள் A/L 2007 யூலை இணைந்த கணிதம் - I

சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?

# யூலை 19 இல் இலங்கையில் மூன்று முக்கிய சம்பவங்கள்!

## அரசியலில் மாற்றம் ஏற்படுமென அவதானிகள் கருத்து

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 19 ஆம் திகதி முக்கிய மூன்று நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. கிழக்கு மாகாணத்தை இராணுவம் மீட்டதற்கான வெற்றிவிழா. ஐக்கிய தேசியக்கட்சி-சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசுடன் தாவிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை என்பனவே.எதிர்வரும் 19 ஆம் திகதி இடம் பெறவுள்ள முக்கிய நிகழ்வுகளாகும்.

கிழக்கில் படையினர் பெற்ற வெற்றியை கிழக்கின் உதயம் என்ற தொனிப்பொருளில் நாடாளாவிய ரீதியில் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இப் பிரதான வைபவம் கொழும்பு -7 சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டில் உள்ள சகல மாவட்டங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் அரச நிறுவனங்கள் அனைத்திலும் இத்தினம் குறித்த நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. சகல அரச பாடசாலைகளிலும் இவ் விழாவைக் கொண்டாடுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளது.

முப்படைகள் மற்றும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோர் பாடசாலைகளில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கிழக்கை மீட்பதற்காக பங்களிப்புச் செய்த இராணுவத்தினர், பொலிஸார் உட்பட சகல படையினருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவிக்கவுள்ளதுடன் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையில் மோதல் நான்கு படையினர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

வவுனியா பாலமோட்டையில் நேற்று தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட சிறப்பு இராணுவப் படையினரை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கி விரட்டியடித்துள்ளனர். இதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆறு பேர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பாலமோட்டைப் பகுதியில் நேற்று மாலை நான்கு மணியளவில் இராணுவத்தின் சிறப்புத் தாக்குதல் படையினர் விடுதலைப்புலிகளின் நிலைகளை தாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது விடுதலைப்புலிகள் அவர்களுக்கு எதிரான தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் அவர்களுக்கு இழப்புக்கள் ஏற்படுத்தப் (08 ஆம் பக்கம் பார்க்க)

# சுதுமலை வடக்கு ஈஞ்சடி
# அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத
# ஸ்ரீ ஞான வைரவ தேவஸ்தான தேர்த் திருவிழா
# சிறப்பு மலர் - 17.07.2007

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



யாழ்ப்பாண நன் நகரில் சுதுமலை எனும் கிராமத்தில் ஈஞ்சடி பதியிலே முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அடியார்களுக்கு இடையூறுகள் ஏற்படாமல் சகல அனுக்கிரகத்தையும் அள்ளி வழங்கி வரும் சாமுண்டாம்பிகா சமேத வைரவப் பெருமானின் தேர்த் திருவிழா இதுவாகும்.

தெட்சணாயன புண்ணிய காலத்தில் வருடந்தோறும் தேர்த் திருவிழா நடைபெற்று வருகின்றது. அன்றைய தினம் அடியார்கள் எம்பெருமானை தரிசித்து எல்லாச் செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ அருள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஆலய பரிபாலனசபையினரின் பெருமுயற்சியினால் உபயகாரர்களின் உதவியோடும் மக்களின் பெரும் முயற்சிகளோடும் திருவிழா நிகழும் 12 நாட்களும் அன்னதானம் நடைபெற்று வருகின்றது.

இவையெல்லாம் ஈஞ்சடி வைரவப் பெருமானின் திருவருள் என்று கூறி எம்பெருமானின் திருவருள் சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**ந.உருத்திரமூர்த்திக் குருக்கள்**
**உற்சவ பிரதமகுரு**
**ஈஞ்சடி, சுதுமலை.**

---

சுதுமலை ஈஞ்சடி அருள் மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞான வைரவர் திருக்கோயில்
அலங்கார (சாந்திக) உற்சவ
தேர்த் திருவிழா விஞ்ஞாபனம்

17.07.2007
செவ்வாய்க்கிழமை

### ஈஞ்சடி வைரவர்

தேரேறி வருகிறான் ஈஞ்சடி வைரவர்
சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர்
தல நாயகன் ஈஞ்சடி வைரவர்
துட்டரை அழிப்பவர் ஈஞ்சடி வைரவர்

சாமுண்டாம்பிகா சமேத ஈஞ்சடி வைரவர்
களிநடம் புரிந்திடும் ஈஞ்சடி வைரவர்
வேள்வியின் நாயகன் ஈஞ்சடி வைரவர்
வேதத்து நாயகன் ஈஞ்சடி வைரவர்

நெய் வடை பாயாசம் பல்வகை அமுது
நினைத்து படைத்தோம் ஈஞ்சடி வைரவர்
தேரேறி வரும் ஈஞ்சடி ஞானவைரவர்
அடைக்கலம் உன்பதம் காப்பதுன் பொறுப்பு

**க.ஸ்ரீநந்தகோபன்**
செயலாளர்
சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவர் திருக்கோயில்

---



## சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்
## வரலாற்றுச் சிறுகுறிப்பு

'ஞான வயிரவன்றாள் மலர் பணிய
ஆன கிரகமொன்பது மன்பொடு பலன்றருமே'

சுதுமலைக் கிராமத்திலே பல நூற்றாண்டு காலத்துக்கு முன் ஈச்சம்பற்றைக்குள் சூல வடிவிலே தோன்றிய எம்பிரானுக்கு அவ்வூர் மக்கள் ஒரு சிறு கோயில் கட்டி வழிபட்டார்கள். அது இன்று பெருங்கோயிலாகக் காட்சி தருகின்றது. அன்று தொட்டு பல அற்புதங்களைச்செய்து வரும் எம்பெருமானுக்குக் காலத்திற்குக் காலம் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளைச் செய்து எம் மக்கள் வழிபடுகின்றார்கள்.

இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயத்தில் பலிகொடுக்கப்பட்டது. இச் செயல் பின்னர் நீக்கப்பட்டது. இலங்கையிலே தேர்த் திருவிழா நடைபெற்று வரும் வைரவர் ஆலயங்களில் இவ்வாலயம் முதன்மையானது என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமைப்படுகின்றோம்.

இவ்வாலயத்தில் பிள்ளையார், முருகன், நாராயணர், லட்சுமி தெட்சணாமூர்த்தி, சண்டேஸ்வரர் போன்ற பரிவார தெய்வங்கள் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. இன்று சிவஸ்தலம் போன்ற உணர்வு எம் மக்களிடம் ஊறியிருக்கின்றது. இவ்வாலயத்தில்தானா பலி கொடுக்கப்பட்டது என்று வியப்பார்கள்.

மஹோற்சவம், ஆடிப் பிறப்பன்று தேர் நடைபெறத் தக்கதாக 11 பெருவிழாக்கள் நடைபெற்று ஈற்றில் பொங்கல் விழா, பெருமடை போட்டு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

தேர், தீர்த்தம் அனைத்தும் மிகவும் பக்தி சிரத்தையோடு நடைபெறுகின்றது. கொடியேற்றம் இல்லையே தவிர மற்றும்படி அனைத்துக் கிரியைகளும் நடைபெறுகின்றன. (வைரவர் ஆலயத்தில் கொடிஏற்றம் செய்ய முடியாது என்ற சமய அறிஞர்களின் வாக்குப்படி கொடியேற்றம் மட்டும் நடைபெறுவதில்லை)

தேர்த் திருவிழாவான ஆடிப் பிறப்பன்று பல ஊர் மக்கள் கூடி, தேர்வடம் பிடிக்கும் காட்சி பக்திப் பரவசமாகக் காணப்படும்.

'எல்லோரும் வாரீர் தேர்வடம் பற்றுவீர்
ஞானவைரவர் அருட்கடாட்சத்தைப் பெறுவீர்'

ச.தம்பித்துரை J. P

---

## எம்மைக் காத்தருள எழுந்து வாரும் ஐயா!

சுதுமலை வரலாற்றிலே பல சிறப்புக்களை நல்கி ஈஞ்சடிப் பதியமர்ந்து
எம்மையெல்லாம்,
அருளாட்சி செய்கின்ற வைரவா
எழுந்து வாரும் ஐயா!
எம்மிடம் இருக்கும் ஆற்றலை
மேம்படுத்த அருள்தாரும் ஐயா!
எம்மக்கள் இனிதே வாழ
அருள் தாரும் அப்பனே வைரவா
உன்னை என்றும் மறவோம்!
உலகெல்லாம் அமைதியும்
சமாதானமும் ஏற்பட்டு சிறப்புடன்
வாழ வாழ்த்தும் ஆசியும்
தாரும் ஐயா!
ஈஞ்சடி வைரவனே உன்னடி
சரணம்!

கா.திருநாவுக்கரசு
தர்மகர்த்தா சபைத் தலைவர்,
சுதுமலை ஈஞ்சடி வைரவர்
திருக்கோயில்.

---

## தேர்த் திருவிழா நிகழ்ச்சி நிரல்

**காலம் :- 17.07.2007 ஆடித் திங்கள் 01 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.**
**அபிஷேகம்:- மு.ப.8.00 மணி**
**விசேட பூசை:- மு.ப.9.15 மணி**
**வசந்த மண்டபப் பூசை :- மு.ப. 10.30 மணி**
**தேர் பவனி :- நண்பகல் 12மணி**
**பச்சை சாத்தல் :- பி.ப. 1.30 மணி**
**உற்சவ குரு:-**
**சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள்**

**தேர் உற்சவத்தின்போது அடியார்கள் வருகை தந்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் திருவருளினைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.**

தர்மகர்த்தா சபை
சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர்
திருக்கோயில்

மலரமைப்பு:
V.கிரிதரன்
மானிப்பாய்

---


## விழா சிறப்புற வாழ்த்துவோர்

ஈஸ்வர பாமினி நகை பூங்கா
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

ஸ்ரீ சுபீர பேக்கரி
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

அம்பாள் ஸ்ரோஸ்
அம்பாள் அரைக்கும் ஆலை
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

லிங்கம் ஹோட்டல்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

அம்பாள் ரேடஸ்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

அபிராமி சவுண்ஸ்
தொடர்பு கொள்ள:-
அம்பாள் ஸ்ரோஸ் சுதுமலை
பாடசாலை வீதி, இளவாலை
பாடசாலை வீதி, சுண்டுக்குளி

சுந்தர் கேபிள் T.V
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

சிவ தன குமாரன் அரிசி ஆலை
இணுவில் கிழக்கு,
இணுவில்.

ஸ்ரீ குமரன் ஹாட்வெயார்
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

ஈஸ்வரன் பேக்கரி
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

(c-225)

# சனி மாற்றம் உங்களுக்கு எப்படி

## துலாம்

சனி பகவான் கர்ம ஸ்தானம் என் னும் தொழில் ஸ் தா ன த் தி ல் இருந்து லாப ஸ் தா ன த் தை அடைகிறார். இது பிரச்சினை இல்லாத காலகட்டம் ஆகும். பொருளாதாரத்தில் அபிவிருத்தி உண்டாகும். குடும்பத்தில் குழப்பம் நீங்கி சகஜ நிலைமை தென்படும்.

பழைய கடன்களை திருப்பி அடைத்து விடுவீர்கள். சேமிப்பு கனிசமாக உயரும். சொந்த வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.தொழிலில் நிலவிய சங்கடங்கள் நீங்கி, அனைத்தும் சாதகமாக அமையும்.

தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்திற்கு தேவையான உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். உங்களை அவமதித்தவர்கள் கௌரவமாக நடத்துவார்கள். கருப்பு நிறப் பொருட்களால் ஆதாயம் கூடும்.

பங்கு மார்க்கெட் போன்ற துறைகளில் ஈடுபட்டு கணிசமான இலாபத்தை அள்ளுவீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சியடை வீர்கள். வெளிநாட்டில் வாழ்பவர்கள் உங்களுக்குத் தாமாகவே உதவி செய்ய முன்வருவார்கள்.

சனிபகவானின் பார்வை உங்கள் ராசியின் மீது படுவதால் உங்களின் ஆற்றல் வெளிப்படும். சனி பகவான் உங்கள் ராசிக்கு பஞ்சமாதிபதியாகி ராசியைப் பார்ப்பதால் உங்கள் பேச்சுக்கு மதிப்புக்கூடும்.

அனைவரையும் அரவணைத்து செல்வீர்கள். உங்களின் மிடுக்கான தோற்றத்தால் நீங்களே பெருமைப்பட்டுக் கொள்வீர்கள்.

சனிபகவான் புத்திர ஸ்தானாதிபதியாகி புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதால், குழந்தைகளின் வாழ்க்கையில் அனுகூலங்கள் உண்டாகும்.

புத்தியில் தெளிவு பிறக்கும். தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றிபெறும் நிலைமை உண்டாகும். சிலர் அரசாங்க வழியில் எதிர்பாராத நன்மைகளைப் பெறுவார்கள்.

சனிபகவானின் பார்வை உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தின் மீது படுவதால், மனதை அரித்துக்கொண்டிருந்த விஷயங்களில் முடிவு தெரியும்.எதிர்பாராத இடங்களில் இருந்து வட்டியில்லாக் கடன்களைப் பெற்று மகிழ்வீர்கள்.

அவற்றை சீரிய முறையில் பயன்படுத்துவீர்கள். ஆக, இந்த இரண்டரை ஆண்டுகளும் உங்களுக்குப் பொற்காலமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த ராசி உத்தியோகஸ்தர்கள், விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவார்கள்.

உங்கள் வேலைகள் திட்டமிட்டபடி குறித்த காலத்திற்குள் முடிவடையும். பணிகளில் தெளிந்த மனநிலையுடன் ஈடுபடுவீர்கள்.

மேலதிகாரிகளிடம் சுமுகமான உறவு நிலை உண்டாகும். சக ஊழியர்களுக்கு நீங்கள் ஒரு தலைவர் போல் காட்சியளிப்பீர்கள் என்றால் மிகையாகாது. சிலர் தாங்கள் பணிபுரியும் அதே அலுவலகத்தின் வேறு பிரிவில் தற்காலிக உயர் அதிகாரியாகப் பணியில் இணைந்து, பின்னாளில் அங்கேயே பணி நிரந்தரமும் பெறலாம்.

வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல் போன்ற விஷயங்கள் சரியான நேரத்தில் கைகொடுக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். கேட்ட இடத்திலிருந்து கடன்கள் கிடைக்கும் . தடைப்பட்டிருந்த புதிய வியாபார விஸ்தரிப்புகளை செய்வீர்கள். போட்டியற்ற சந்தைகளைக் காண்பீர்கள் உங்கள் பொருட்களை தனிக்காட்டு ராஜாவாக விற்பனை செய்யலாம்.

கூட்டாளிகளும், நண்பர்களும் உங்களின் பேச்சைக்கேட்டு நடந்துகொள்வார்கள். விவசாயிகள் நூதன யுக்திகளைப் புகுத்தி , விவசாயத்தைப் பெருக்குவார்கள். வங்கிகளிடம் இருந்தும், கூட்டுறவு சங்கங்களிடம் இருந்து எதிர்பார்த்த கடன்கள் மானியத்துடன் கிடைக்கும்.

மனச்சோர்வு நீங்கி, எதையும் சாதிக்கும் அளவிற்கு தன்னம்பிக்கையுடன் திகழ்வீர்கள். பழையகுத்தகைப் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்துவீர்கள். மற்றப்படி கருப்பு நிறப் பயிர்களைப் உற்பத்தி செய்தால் நல்ல பலனை அடையாலாம். அரசியல்வாதிகள் புதிய பொறுப்புகளைப் பெறுவார்கள்.

உங்கள் தைரியமும், ஆற்றலும் அதிகரிக்கும். எதையும் சமாளிப்பீர்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். உடல் நலத்தில் அக்கறை செலுத்துவீர்கள். கட்சித் தலைமையிடம் நற்பெயர் எடுப்பீர்கள் . வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்பைக் காண்பீர்கள்.இந்த ராசி கலைத்துறையினர், தேவைக் கேற்ற வருமானத்தைக் காண்பார்கள். உங்களின் திறமைகள் வெளிப்பட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

ரசிகர்களின் ஆதரவுடன் மனதிற்கினிய பயணங்களை மேற்கொள்வீர்கள். புதிய கலைஞர்களின் நட்புக்கிடைக்கும். மேலும் புதிய சொத்துக்களை வாங்குவீர்கள் பெண் மணிகளுக்கு பிதுரார்ஜித சொத்துக்கள் கைவந்துசேரும். அனைவரின் கவனத்தையும் உங்கள் திறமையினால் கவருவீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்களை நடத்துவீர்கள். ஆடை, அணி மணிகளைப் வாங்குவீர்கள் . பொருளாதாரம் சிறப்பாக அமையும். கணவருடன் அன்னியோன்யம் அதிகரிக்கும்.

மாணவ மணிகள் பெற்றோர் மற்றும் ஆசிரியரின் பிரியங்களுக்கு ஆளாவீர்கள். மனதில் உற்சாகம் கூடும். உங்கள் முயற்சிகள் தடை. தாமதமின்றி நிறைவேறும். விளையாட்டிலும் சாதனைகளைச் செய்வீர்கள்.

(தொடரும்)

# இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாண இந்திய அரசு தலையிட வேண்டும் -

## திராவிடக் கழகத் தலைவர் வீரமணி

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுகாண இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார். திருச்சியில் ஊடகவியலாளர்களுக்கு கி.வீரமணி சனிக்கிழமை அளித்த நேர்காணல்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடக்கும் கொடுமை, போர் தீவிரமாகும் சூழ்நிலையால் அங்கு உள்ள தமிழர்கள் அகதிகளாக வெளியேறும் நிலை உள்ளது. சிலர் காடுகளுக்கு சென்று உணவு இல்லாமல் தவிக்கிறார்கள்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷ சமாதானம், போர் நிறுத்தம், வெளிநாடுகளை சமரசம் செய்யுங்கள் என்று கூறிக்கொண்டே அங்குள்ள தமிழர்களை கொடுமைபடுத்தி வருகிறார். அங்குள்ள தமிழர்கள் தொப்புள் கொடி உறவுள்ள மண்ணாக தமிழ்நாட்டை கருதுகிறார்கள். அண்டை நாட்டிலே பாதிக்கப்பட்ட அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஏராளமாக அகதிகளாக வரும் நிலை ஏற்படும்.

இந்திய அரசுக்கு மாபெரும் கடமை உண்டு. தன் செல்வாக்கை மத்திய அரசு பயன்படுத்தி இலங்கை தமிழர் பிரச்சினையில் அரசியல் ரீதியான தீர்வுகாண முன்வர வேண்டும். இதை வலியுறுத்தி திராவிடர் கழகம் சார்பில் வருகிற 20அம் திகதி தமிழ்நாடு முழுவதும் ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்புகோரி ஆர்ப்பாட்டம்நடக்கிறது. சென்னை ஆர்ப்பாட்டத்துக்கு நான் தலைமை தாங்குகிறேன் என்றார் அவர். (அ-5)

# மோசடி வழக்கில் நீதிமன்றில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க

வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 1.4 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க நீதிமன்றில் ஆஜரானார் .

கங்கொடவில தலைமை நீதிபதி பத்மினி ரணவக்க குணதிலக்கவிடம் கடந்த வெள்ளிக்கிழமை ஜீவன் குமாரதுங்க சமுகமளித்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பத்மினி ரணவக்க குணதிலக்க, ஜீவன் குமாரதுங்க மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருப்பின் அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம் என்று உத்தரவிட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக ஐந்து இளைஞர்களை அனுப்பி வைப்பதில் மோசடி செய்ததாக அமைச்சர் ஜீவன் குமாரதுங்க மீது அவரால் மோசடி செய்யப்பட்டதாக டபிள்யூ வி.ஏ.ஜகத் பிரியந்த நீதிமன்றில் வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் நீதிமன்றில் ஜீவன் குமாரதுங்க சமுகமளிக்காமையால் ஜுன் 13 ஆம் திகதி நீதிமன்றில் சமுகமளிக்குமாறு கங்கொடவில நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருந்தது. (அ-5)

## அடையாள அட்டை

சரவணை மேற்கு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம் யோகமலரின் விசேட அடையாள அட்டை இல.(091205601), தீவக அடையாள அட்டை என்பன வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்அடையாள அட்டைகளை வலம்புரி காரியாலயத்தில்பெற்றுக் கொள்ளலாம்.

# தொடரும் யுத்த நிலைமையால் சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி

சுற்றுலாத்துறை இந்த ஆண்டில் முதல் அரை பகுதியில் 24.4 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக கடந்த மாதம் 30 சதவீதம் சுற்றுலா பயணிகளின் வருகையில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போதைய யுத்த நிலைமைகளே இதற்கு காரணம் என சுற்றுலா அபிவிருத்தி துறையின் பணிப்பாளர் கலைச்செல்வம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது கடந்த மே மாதம் 40 சதவீதமான சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் அரை ஆண்டு அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடத்தின் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடம் 14.8 வீதமான வீழ்ச்சி காணப்படுகின்றது. இனிவரும் அரையாண்டில் மேலும் வீழ்ச்சி ஏற்படுமென பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-5)



தி.ரவீந்திரநாதனின் பஞ்சபுராண தொகுப்பு வெளியீட்டு விழா கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் 01.07.2007ல் நடைபெற்றது. அந் நிகழ்வில் சிவ.மகாலிங்கம் முதற் பிரதியை, வலம்புரி நிர்வாக முகாமை இயக்குநர் S.வெற்றிவேலாயுதத்துக்கு வழங்குவதையும் இதன் நடுவே தொகுப்பாசிரியர் தி.ரவீந்திரநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம். *(இருபாலை நிருபர்)*

# சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு - 2007

யாழ்.மாவட்டத்தில் 2007ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளை தெரிவுசெய்து கௌரவிக்கும் நிகழ்வானது செப்ரெம்பர் 6ஆம் திகதி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத் தில் நடைபெறவுள்ளது. இத் தெரிவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக 34 விவசாயிகளும், மாவட்ட மட்டத்தில் 6 விவசாயிகளும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப் போட்டியில் கலந்துகொள்ள இருக்கும் விவசாயிகள் அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளும்படியும், போட்டிகள் யாவும் ஆவணி மாதம் 20ஆம் திகதிக்கு முன் நிறைவுசெய்ய வேண்டி இருப்பதால் ஆர்வமுள்ள அனைவரும் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் 31.07.2007 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

* சிறந்த சுய விதை நெல் உற்பத்தியாளர்.

* 2007 சிறுபோகத்தில் நிலக்கடலைச் செய்கையில் ஹெக்ரர் ஒன்றிற்கு 2.5 M.Tக்கு மேல் விளைவுபெற்ற விவசாயி.

* 2006/07 காலபோகத்தில் வெற்றிகரமான குரக்கன் செய்கையாளர்

* 'உமா' எள்ளு செய்கையின் (புதிய இனம்) உச்ச விளைச்சலைப்பெற்ற விவசாயி

* 2006/2007 காலபோகத்தில் உணவுப் பாதுகாப்பிற்காக சோளப் பயிர்ச்செய்கையை குறைந்தது 250 சதுர மீற்றர் நிலப்பரப்பில் வெற்றிகரமாக மேற்கொண்ட விவசாயி.

* கௌபீ சுய விதை உற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொண்டு தூய விதை விநியோகம் செய்யும் சிறந்த விவசாயி.

* சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர் போன் விவசாயிகள் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக விண்ணப்பிக்க முடியும் என்றும்.

* நுண் நீர்பாசன மூலம் உயர்விளைவும் செறிவான பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளும் விவசாயி.

* சிறந்த பெறுமான அதிகரிப்பினை வர்த்தக ரீதியில் மேற்கொள்வதில் சிறந்த மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்

* திட்டமிட்ட மாதிரி நகர்ப்புற விவசாயச் செய்கையாளர்

* விவசாய விரிவாக்கத்திற்கு உறுதுணையாக செயற்படும் சிறந்த விவசாய சம்மேளனம்

* சிறப்பான கத்தரிப்பு பராமரிப்பு மூலம் உயர்விளைவு பெறும் மாமரச் செய்கையாளர்

* நியாப் மையக்கிராமங்களில் பயனாளிகளுக்கு அதிகூடிய விவசாய விரிவாக்க சேவையை பெற்றுக்கொடுக்கும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்போர் மாவட்ட மட்டத்தெரிவுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பு,றோயல் கல்லூரி

## க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை ①

ஜுலை 2007

**இணைந்த கணிதம்– I**

நேரம் –3 மணித்தியாலம்

### பகுதி I

ஆறு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

01) **a.** தரப்பட்ட இருபடிச் சமன்பாடொன்றின் இரு மூலங்களின் கூட்டுத்தொகையையும், பெருக்குத்தொகையையும் சமன்பாட்டின் குணகங்களின் சார்பில் காண்க.

$ax^2+2bx+c=0,\ a^1x^2+2b^1x+c^1=0$ என்னும் இரு சமன்பாடுகளுக்கும் ஒரு பொது மூலம் உண்டு எனக்கொள்க. $\frac{a}{a^1},\frac{b}{b^1},\frac{c}{c^1}$ என்பன ஒருகூட்டல் விருத்தியில் இருப்பின் $a^1, b^1, c^1$ என்பன ஒரு பெருக்கல் விருத்தியில் அமையும் எனக் காட்டுக.

**b.** பின்வரும் சமன்பாட்டினைத் தீர்க்க

$|x+1|-|x|+3|x-1|-|x-2|=(x+2)$

02) **a.** 5,6,7,8,9,0 என்னும் இலக்கங்களைப் பயன்படுத்தி 450000 இலும் பெரிதான ஆறு இலக்கங்களைக் கொண்ட எத்தனை ஒற்றை எண்கள்

**i.** எவ்வித கட்டுப்பாடுமின்றி,

**ii.** ஓர் இலக்கத்தை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி ஆக்கலாம்.

**b.** $n,k$ என்பன நேர் முழு எண்களாயிருக்கும் போது,

$S_k=1^k+2^k+3^k+....+n^k$ ஆயின்,

$\sum_{r=1}^{M} {}^{M+1}C_r S_r=(n+1)^{m+1}-(n+1)$ எனக்காட்டுக.

$S_3$ ஐக் காண்க.

03) **a.** $x+y=u+v$ உம் ,$x^2+y^2=u^2+v^2$ உம் ஆகுமாறு $x,y,u,v$ என்பன நான்கு மெய் எண்களாகும். $n\in Z^+$ இற்கு , $x^n+y^n=u^n+v^n$ என்பதைக் கணிதத் தொதறிவுக் கோட்டபாட்டினைப் பயன்படுத்தி நிறுவுக.

**b.** $U_r=\frac{r+4}{r(r+1)(r+2)}$ ஆயின் , $U_r=2V_r-V_{r+1}$ ஆகுமாறுமாறிலி $k$ ஐக் காண்க.

இங்கு $V_r=\frac{k}{r(r+1)}$ ஆகும்.

இதிலிருந்து $\sum_{r=1}^{n}\frac{U_r}{2^{r+1}}$ ஐக் காண்க

04) **a.** $BD=2AC$ ஆகுமாறு சாய்சதுரம் $ABCD$ இன் மையம் $M$ ஆகும் .$D,M$ என்பவற்றை வகைக்குறிக்கும் சிக்கல் எண்கள் முறையே $(1+i),(2-i)$ ஆகும். உச்சி $A$ ஐ வகைக்கும் சிக்கல் எண் $(1-\frac{3}{2}i)$ அல்லது $(3\frac{1}{2}i)$ எனக்காட்டுக.

**b.** முக்கோணி $ABC$ இன் உச்சிகள் $A,B,C$ ஐ வகைக்குறிக்கும் சிக்கல் எண்கள் முறையே $Z_1, Z_2, Z_3$ ஆகும்.

$\frac{1}{Z_1-Z_2}+\frac{1}{Z_2-Z_3}+\frac{1}{Z_3-Z_1}=0$ ஆயின் $ABC$ ஓர் சம பக்க முக்கோணி எனக்

05) **a.** $\lim_{\theta\to\pi/4}\left\{\frac{\sqrt{2}-\cos\theta-\sin\theta}{(4\theta-\pi)^2}\right\}=\frac{1}{16\sqrt{2}}$ எனக் காட்டுக.

**b.** $y=t^m+t^{-m}$ உம் $x=t+t^{-1}$ உம் $(t\neq 0)$ ஆயின்

**i.** $(x^2-4)\left(\frac{dy}{dx}\right)^2=m^2(y^2-4)$ எனவும்,

**ii.** $(x^2-4)\frac{d^2y}{dx^2}+x\frac{dy}{dx}-m^2y=0$ எனவும், காட்டுக.




**c.** $ABCD$ என்பது ஓர் செவ்வகம் ஆகவும் $CDE$ என்பது ஓர் சமபக்க முக்கோணி ஆகவும் இருக்குமாறு $ABCED$ என்பது 16 m சுற்றளவுள்ள ஒரு யன்னல் ஆகும். அதி கூடிய சூரிய ஒளியை உள்விடுமாறு அமைக்கப்பட வேண்டிய யன்னலின் அகலத்தைக் காண்க.

06) **a.** (i) $\int_{-1}^{3/2}|x\sin\pi x|dx=\frac{1}{\pi}\left(3+\frac{1}{\pi}\right)$ எனவும் ,

(ii) $\lim_{x\to\infty}\int_{0}^{k}\frac{x(\tan^{-1}x)^2}{(1+x^2)^{1/2}}dx=\pi-2$ எனவும் , காட்டுக.

**b.** $\int\cos\left(2\cot^{-1}\sqrt{\frac{1-x}{1+x}}\right)dx$ ஐக் காண்க. (பிரயீடு $x=\cos\theta$)

07) சமாந்தரமற்ற இரு நேர் கோடுகள் $y=m_ix+c_i$ ஆல் தரப்படுகின்றன. இங்கு $i=1,2$; $\theta$ என்பது அவ் இரு நேர்கோடுகளுக்கும் இடைப்பட்ட கூர்ங் கோணம் ஆயின்

$\tan\theta=\left|\frac{m_1-m_2}{1+m_1m_2}\right|$ எனக் காட்டுக

சாய்சதுரம் $ABCD$ இன் உச்சிகள் $A\left(\frac{-\gamma}{\alpha+\beta},\frac{-\gamma}{\alpha+\beta}\right)$ , $C\left(\frac{-\lambda}{\alpha+\beta},\frac{-\lambda}{\alpha+\beta}\right)$ ஆகும்.

இங்கு $\alpha>\beta>0$ , $\gamma>\lambda$ ஆகும். சாய்சதுரத்தின் பரப்பு $\frac{(\gamma-\lambda)^2}{\alpha^2-\beta^2}$ எனின்,

**i.** $AC$ இன் நீளம்

**ii.** $AC$ இன் சமன்பாடு

**ii.** சாய்சதுரத்தின் நான்கு பக்கங்களின் சமன்பாடுகள் என்பவற்றைக் காண்க

08) **a.** $S_1\equiv x^2+y^2+2g_1x+2f_1y+c_1=0,\ S_2\equiv x^2+y^2+2g_2x+2f_2y+C_2=0$ ஆகியவற்றினால் தரப்படும் இரு வட்டங்கள் நிமிர் கோணமுறையாக இடைவெட்டும் எனின் போதுமானதும், தேவையானதும் ஆன நிபந்தனை $2g_1g_2+2f_1f_2=C_1+C_2$ எனக் காட்டுக

**b.** $(0,3)$ என்னும் புள்ளியினூடாகச் செல்வதும் , $x$ அச்சைத் தொடுவதுமான ஒரு வட்டம் $S$ ஆனது $x^2+y^2-4x+6y-7=0$ ஐ நிமிர் கோண முறையாக இடைவெட்டுகின்றது. $S$ இற்கு ஒரே ஒரு வட்டம் மாத்திரம் உண்டு எனக் காட்டுக. $(x,y)$ என்பது இவ்வட்டத்திலே அல்லது இவ்வட்டத்தினுள்ளே கிடக்கும் யாதுமொரு புள்ளியாயின $x+y=\frac{\lambda}{\sqrt{2}}$ ஆகுமாறு $\lambda$ இன் உயர்வு ,இழிவு பெறுமானங்களைக் காண்க.

09) **a.i.** $1+\cos 2\theta+\sin 2\theta=\tan(\theta+45^0)$ ஐக் தீர்க்க

**ii.** $\cos^{-1}\left(\frac{x}{a}\right)+\cos^{-1}\left(\frac{y}{b}\right)=\alpha$ எனின்

$\frac{x^2}{a^2}-\frac{2xy}{ab}\cos\alpha+\frac{y^2}{b^2}=\sin^2\alpha$ எனக் காட்டுக

**b.** முக்கோணி $ABC$ இன் இடையம் $AD$ உம், செங்குத்துயரம் $AE$ உம்,கோணம் $BAC$ ஐ முச்சம கூறிடுகின்றன. வழமையான குறியீடுகளைப் பயன்படுத்தி.

$\cos\frac{A}{3}\sin^2\frac{A}{3}=\frac{3a^3}{32bc}$ எனக் காட்டுக.

**இணைந்த கணிதம் II**

நேரம் –3 மணித்தியாலம்

### பகுதி II

ஆறு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

01) **i.** $A$ என்ற துணிக்கை ஒன்று நிலைக்குத்தாக மேல் நோக்கி தொடக்க வேகம் $ums^{-1}$ உடன் எறியப்பட்டு $ts$ இடைவேளையின் பின் இன்னொரு துணிக்கை $B$ அதே எறியப்புள்ளியிலிருந்து அதே வேகம் $ums^{-1}$ உடன் எறியப்படுகிறது. $A$ யின $B$ தொடர்பான இயக்கத்திற்கு வேக நேர வளையி வரைந்து இதிலிருந்து இரு துணிக்கைகள் $A$யும் $B$யும் மோதுவதற்கு எடுத்த நேரத்தை காண்க. மேலும் அவை மோதும் போது ஆரம்பப் புள்ளியிலிருந்து அந்த உயரம் $\frac{(4u^2-g^2t^2)m}{8g}$ எனக் காட்டுக.

**ii.** $A,B,C$ என்ற மூன்று துணிக்கைகள் தரைமட்டத்திற்கு மேலே உள்ள ஒரு புள்ளியிலிருந்து ஒரே நேரத்தில் , ஒரே நிலைக்குத்துத் தளத்தில் எறியப்படுகின்றன. $A$யானது கிடையாக $U$ வேகத்துடனும் ; $B$யானது மேல் நோக்கிய நிலைக்குத்துடன் $(90^\circ-\theta)$ வில் $U$ வேகத்துடனும் , $C$ யானது நிலைக்குத்தாக மேல் நோக்கி $V$வேகத் துடனும் எறியப்படுகின்றன. தொடர்பு இயக்கத்தைப் பயன்படுத்தி $\frac{\cos\theta}{u}+\frac{\sin\theta}{v}=\frac{1}{U}$ எனின் எந்த ஒரு கணத்திலும் துணிக்கைகள் $A,B,C$ என்பன நேர் கோட்டில் இருக்கும் எனக் காட்டுக.

02) இரண்டு துணிக்கைகள், எதிர்த்திசைகளில் கிடை தளத்திற்கு மேலே $h$ உயரத்திலுள்ள ஒரு புள்ளியிலிருந்து $u$ வேகத்துடன் எறியப்படுகின்றன.

**i.** $u^2>2gh$ எனின் அவை கிடைத் தளத்தை அடிக்கும் மிகக் கூடிய கிடைத்தூரம் $\left(\frac{u^2}{g}+2h\right)$ எனக் காட்டுக.

**ii.** $u^2<2gh$ எனின் மேலுள்ள தூரம் $2u\sqrt{\frac{2h}{g}}$ எனக் காட்டுக.

03) **i** . ஓர் ஒப்பமான கிடைத்தளத்தின் மீது ஓய்வில் நிற்கும் $M$ திணிவுடைய ஒரு மனிதன் $M$ திணிவுடைய பந்தொன்றினை எறிகின்றான். அதே தளத்தின் மீது நிற்கும் $M^1$ திணிவுடைய நாய் ஒன்று, அப் பந்தினைப் பிடிக்கின்றது. பந்து, மனிதனை விட்டு நீங்கும் போது, மனிதன் தொடர்பான பந்தின் வேகம் $V$ ஆகவும் கிடையுடன் ஏற்றக்கோணம் $\theta$ ஆகவும் உள்ளது. நாய் $\frac{MmV\cos\theta}{(M^1+m)(M+m)}$ என்னும் வேகத்தைப் பெறுகிறது என நிறுவுக.

**ii.** லொறி ஒன்று $ukmh^{-1}$ வேகத்துடன் இயங்கும் போது அதன் இயக்கத்துக்கான தடை $(k+\frac{3}{20}u^2)\,gN$ ஆகும். 4 மெற்றிக் தொன் திணிவுடைய அந்த லொறியின் எஞ்சினின் வலு 25 kw ஆகும். 100 இல் I ஆன சாய்விலே அது மேல்நோக்கிய திசையில் செல்லும் போது அதன் உயர்கதி $36kmh^{-1}$ ஆகும். $K$ யின் பெறுமானத்தை காண்க. எஞ்சின் நிறுத்தப்பட்டு அதே தளத்தில் அது கீழ் நோக்கி செல்லும் போது அதன் உயர்கதியைக் காண்க.

04) **i** .திணிவு $M$ உடைய ஒப்பமான ஒரு ஆப்பு ஒப்பமான ஒரு கிடைத்தளத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.$m_1,m_2$ திணிவுடைய இரு துணிக்கைகள் முறையே கிடையுடன் $\alpha,90^0-\alpha$ கோணங்களை ஆக்கும் முகங்களில் வைக்கப்பட்டு ஆப்பின் உச்சியிலிருந்து ஒரே நேரத்தில் விடுவிக்கப்படுகின்றன. இரு துணிக்கைகளும் ஒரே நேரத்தில் கிடைத்தளத்தை அடைந்தால்

$\tan^2\alpha=\frac{M+m_2}{M+m_1}$ எனக் காட்டுக.

**ii.** $A,B,C$ என்பன மூன்று சிறிய சமதிணிவுள்ள மணிகள் ஒரு ஒப்பமான கிடைவட்டக் கம்பியிலே கோர்க்கப்பட்டுள்ளன. $B$யும் $C$யும் சுற்றளவின் $\frac{1}{64}$ இடைத் தூரத்திலே ஓய்வில் உள்ளன. கம்பியின் வழியே $A$எறியப்படும் போது $B$ உடன் மோதுவதனால் $B$ கம்பியின் வழியே சென்று $C$ உடன் மோதுகிறது. எந்த இரு மணிகளுக்கும் இடையில் உள்ள மீளமைவுக் குணகம் $\frac{4}{5}$ எனின் $C$ஐ $A$ முந்த முயலும் அதே கணத்தில் $AB$யை முந்த முயல்வதனால் அடுத்த மொத்தல் நிகழும் எனவும் , இது நடைபெறுவதற்கு முன்னா, $C$ சுற்றளவின் $\frac{9}{8}$ ஐ கடந்திருக்கும் எனவும் காட்டுக.

05) **i** .உந்தக் காப்பு தத்துவத்தையும் , சக்திக்காப்புத் தத்துவத்தையும் கூறுக. $M$ திணிவுடைய ஒரு சீரான சதுரமுகி வடிவகுற்றி ஒன்று ஒரு ஒப்பமான கிடைதளத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இக்குற்றியின் மையம் $O$ வினூடாக செல்கின்ற நிலைக்குத்து தளத்தில் ஒரு ஒப்பமான துவாரம் போடப்படுகிறது. துவாரத்தின் குறுக்கு வெட்டு ஆரை $a$ ஆகும் .நிலைக்குத்துடன் $\theta$ கோணத்தில் சாய்ந்துள்ள இத் துவாரத்தின் நுனியிலிருந்து $m$ திணிவுள்ள $P$ என்ற ஒரு துணிக்கை விடப்படுகிறது. தொகுதி விடப்பட்ட கணத்திலிருந்து சதுரமுகியின் இடப்பெயர்ச்சி $x$ எனின்

**i.** $(M+m)\dot{x}=ma\dot{\theta}\sin\theta$ எனவும்.

**ii.** $(M+m\sin^2\theta)\,a\dot{\theta}^2=2(m+M)(1-\cos\theta)\,g$ எனவும் காட்டுக. துணிக்கையானது துவாரத்தின் அதிதாழ்புள்ளியில் இருக்கும் போது தளத்துக்கும் சதுரமுகிக்கும் இடையிலுள்ள மறுதாக்கம் $\left(1+\frac{4m}{M}\right)(m+M)g$ எனக் காட்டுக

**iii.** ஒப்பமான கிடைமேடையொன்றில் உள்ள $A,B$ என்னுமிருபுள்ளிகளுக்கிடையே $8a$ என்னும் இயற்கை நீளம் கொண்ட மீள்தன்மை இழையொன்று ஈர்க்கப் பட்டுள்ளது. $M$திணிவுடைய துணிக்கையொன்று இழையிலுள்ள $C$ என்னும் ஒரு புள்ளிக்கு இணைக்கப்பட்டுள்ளது. இங்கு $AC=3a$ துணிக்கையானது $A$க்கும் $B$க்கும் இடையில் $AD=a$ ஆகுமாறு உள்ள ஒரு புள்ளி $D$யிற்கு இழைவழியே $BA$திசையில் இழுக்கப்படுகிறது. துணிக்கையானது $D$ யிலிருந்து விடப்பட்டுகணநிலை ஓய்விற்கு வரும் போது $A$யிலிருந்தான் அதன் தூரம் $\frac{(3+\sqrt{13})a}{2}$ எனக் காட்டுக.

(5ஆம் பக்கம் பார்க்க)

*(04ஆம் பக்க தொடர்ச்சி....)*

06) **i.** $l$ நீளமுள்ள ஒரு நீளா இழையின் முனைகளுக்கு ஒரே அடர்த்தியும் ஆனால் வித்தியாசமான ஆரைகள் **a,b** களையும் உடைய இரண்டு சீரான கோளங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இழையானது ஒரு முளையொன்றின் மேலாகச் செல்லும் போது கோளங்கள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு சம நிலையில் இருக்கின்றன. முளையானது இழையின் நீளத்தைப் பிரிக்கும் விகிதம்.

$[b^3(b+l)-a^4]:[a^3(a+l)-b^4]$ எனக் காட்டுக. மேலும் கோளங்களுக்கு இடையிலுள்ள மறு தாக்கத்தையும் காண்க.

(ii)



ஏழு இலேசான கோல்களைக் கொண்ட ஒரு சட்டப்படல் **ABCDE** வரிப்படத்தில் காணப்படுகின்றது. கிடை, நிலைக் குத்து கோல்களின் நீளங்கள் சமனாகும். இரு திணிவுகள் 100kg,200kg முறையே **B**யிலும் **C**யிலும் இருந்து தொங்க விடப்படுகின்றன. சட்டப்படலானது **A**யில் சுயாதீனமாகப் பிணைக்கப்பட்டு **E**யில் பிரயோகிக்கப்படும் ஒரு கிடை விசை **P** யினால் சமநிலையில் இருக்கின்றது. தகைப்பு வரிப்படம் வரைந்து **P**யின் பெறுமானத்தையும் கோல்களிலுள்ள உதைப்புக்களையும் இழுவைகளையும் காண்க.

07) **i.** $W$ நிறையுடைய சீரான கோல் **PQ** ஆனது **4W** நிறையுடைய சீரான உருளை வடிவ சாடியொன்றிற்குள் கோலின் ஒரு பகுதி இருக்குமாறு வைக்கப்பட்டு ஒரு கரடான கிடை மேசையில் ஓய்வில் இருக்கின்றது. கோலானது அதன் ஒரு முனை **P** சாடிக்குள்ளே கரடான வளைமேற் பரப்புக்கெதிராக சாய்ந்து சாடியின் ஒப்பமான வட்ட விளிம்பின் மேலாகச் செல்கிறது. கோல் எல்லைச் சமநிலையில் இருக்கும் போது ஒரே நேரத்தில் கோல் வழுக்க ஆரம்பிக்கும் எனின் நிலைக்குத்துக்கும் , சாடியின் அச்சுக்கும் இடையிலுள்ள $\frac{1}{2}\lambda+\frac{1}{2}\cos^{-1}\left(\frac{1}{3}\cos\lambda\right)$ கோணம் எனக் காட்டுக.

இங்கு $\lambda$ கோலுக்கும் ,சாடியின் வளைந்த உள்மேற்பரப்புக்கும் இடையிலான உராய்வுக் கோணமாகும்.

**ii.**



உருளையின் அடியிலிருந்து அதன் ஆரைக்குச் சமமான ஆரையுடைய அரைக்கோள வடிவிலான பகுதி நீக்கப்பட்டு உருளையின் நுனியுடன் பொருத்தப்பட்டு படத்தில் காட்டியவாறு ஒரு திண்ம உடல் செய்யப்படு கின்றது. இந்த உடலானது புள்ளி **A** யிலிருந்து தொங்க விடப் படும்போது, உருளையின் அச்சுக்கும் நிலைக்குத் துக்கும் இடையிலான கோணம் $\theta$எனின்

$$\tan\theta=\frac{6r}{3h+4r}$$ எனக் காட்டுக.

08) **i.** தம்முள் புற நீக்கும நிகழ்ச்சிகள

**ii.** நிகழ்ச்சித் தொடரி ஒன்றின் பிரிப்பு நிகழ்ச்சிகள் என்னும் பதங்களை விபரிக்குக. $A_1,A_2,\ldots\ldots\ldots A_n$ என்பன மாதிரி வெளியிலுள்ள நிகழ்ச்சித் தொடரி ஒன்றின் ஒரு பிரிப்பு ஆகும. இந்த வெளியில் **D** ஏதாவது ஒரு நிகழ்ச்சி எ

$$P(A_j/D)=\frac{P(D/A_j).P(A_j)}{\sum_{i=1}^{n}P(D/A_i).P(A_i)}$$

மோட்டார் கார் ஓட்டபபநதயததில போட்டியாளன ஒருவன் 3 மணித்தி யாலயங்களுக்குள் பிரயாணத்தை முடிக்கவேண்டும். போட்டி நடத்தப்படும் மூன்று கால நிலைகள் **A, B,C** களுக்கான நிகழ்தகவுகள் முறையே $\frac{1}{3},\frac{1}{2},\frac{1}{6}$ ஆகும். இக் காலநிலைகளின் கீழ் போட்டியைப் முடிப்பதற்கான நிகழ் தகழ்வுகள் முறையே $\frac{3}{4},\frac{2}{5},\frac{1}{10}$ ஆகும்.

**i. 3** மணித்தியாலங்களில் போட்டியாளன் பந்தயத்தை முடிப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**ii.** போட்டியாளன் ஓட்டப்பந்தயத்தை 3 மணித்தியாலங்களில் முடிக்க முடியாவிட்டால் அது கால நிலை **C** யினால் வருவதற்கான நிகழ்தகவு யாது?

09) **a** ஒரு தொடை அவதானங்கள் $\{x_1,x_2,x_3\ldots\ldots\ldots x_n\}$ இன் இடையும் , மாறற்றிறனும் முறையே $M$ உம், $V$உம் ஆகும்.

$nM=x_1+x_2+x_3\ldots\ldots\ldots+x_n$ எனவும்

$nV=x_1^2+x_2^2+x_3^2\ldots\ldots\ldots+x_n^2-nM^2$ எனவும் காட்டுக.

அவதானங்கள் ஏறு வரிசையில் $x_1<x_2<x_3<\ldots\ldots<x_n$ எனத்தரப்படுகிறது.இங்கு $x_1=-6$ உம் $x_n=6$ உம் ஆகும்.

**i.** $x=4$ உம் $x_2=a$ , $x_3=2a$ உம் எனின் $M=\frac{3a}{4}$ எனவும் $V=18+\frac{11a^2}{4}$ எனவும்காட்டுக.

**ii.** இரண்டு அடுத்தடுத்த அவதானங்களின் வித்தியாசம் ஒரு மாறிலி எனின் $M=O$ எனவும் $V=12\left(1+\frac{2}{n-1}\right)$ எனவும் காட்டுக.

**b.** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 80 பேரின் புள்ளிகள் கீழுள்ள பரம்பலில் காட்டப்பட்டுள்ளது.

| புள்ளிகள் | 30 - 39 | 40 - 49 | 50 - 59 | 60 - 69 | 70 - 79 | 80 - 89 | 90 - 99 |
|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 5 | 10 | 15 | 30 | 10 | 5 | 5 |

**i.** இடையத்தையும் ,ஆகாரத்தையும்

**ii.** இடையையும் நியம விலகலையும்

**iii.** விடைத்தாள்களை மீளாய்வு செய்யும் போது 5மாணவர்களின் புள்ளிகள் 40–49இலிருந்து 50 – 59 க்கும் வேறு 5 மாணவர்கள் புள்ளிகள் 50–59 இலிருந்து 60–69 க்கும் மாறியது. புதிய இடையையும் நியம விலகலையும் காண்க.

# சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 700 விக்கெற் வீழ்த்தி சாதனை

டெஸ்ட் கிரிக்கெட்டில் 700 விக்கெற் என்ற மைல் கல்லை எட்டினார் 'சுழல் மன்னன்' முத்தையா முரளி தரன்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற் பந்துவீச்சு ஜம்பவானான இவர் நேற்று முன்தினம் தனது சொந்த மண்ணான கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற பங்களாதேஷுடனான 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவ்வணியின் இறுதி துடுப்பாட்ட வீரரான சயீட் ரஸலை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் தனது 700 ஆவது விக்கெற்றை கைப்பற்றினார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 700 விக்கெற்றுக்களை கைப்பற்றிய இரண்டாவது வீரர் முத்தையா முரளிதரன் ஆவார். அதிக விக்கெற்றுக்களைக் கைப்பற்றி (708 விக் கெற்றுக்கள்) சாதனையாளராகத் திகழும் அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்னை முந்துவதற்கு முரளிக்கு இன்னும் 9 விக்கெட்டுக்கள் மாத்திரமே தேவைப்படுகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுடன் அங்கு நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் போது முரளி இலகுவில் முறியடிக்க முடியாத புதிய உலக சாதனையை படைப்பார் என நம்பப்படுகிறது.

35 வயதான முத்தையா முரளிதரன் தனது 113 ஆவது டெஸ்ட் போட்டியிலேயே 700ஆவது விக்கெற்றை கைப்பற்றினார்.

பங்களாதேஷுடனான இப் போட்டியில் முரளி முதலாவது இன்னிங்ஸில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்றுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 59 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினார்.

இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓர் இன்னிங்ஸில் 60 தடவைகள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். அத்துடன் 20 ஆவது தடவையாக டெஸ்ட் போட்டியில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டிகளில் சிறந்து விளங்கும் முத்தையா முரளிதரன் 297 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 455 விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் முரளியின் சுழலில் 'அதிக தடவை விக்கெற்றைப் பறி கொடுத்தவர் தென்னா பிரிக்க அணியின் விக்கெற் காப்பாளர் மார்க் பௌச்சர். இது வரை 12 தடவைகள் பௌச்சரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். முரளி இவருடைய பந்து வீச்சில் அதிக பிடிகளை கைப்பற்றிய வீரராக மஹேல ஜெய வர்த்தனா விளங்குகின்றார்.



அவர் இதுவரை முரளியின் பந்து வீச்சில் 64 பிடிகளைக் கைப்பற்றியுள் ளார். இதேவேளை முரளியின் 700 விக் கெற்றுக்கள் மைல் கல்லை அடைந்த போது முன்னைய கால வான வேடிக்கைகள் விட்டு ஆரவாரம் இன்றி தாயார் மகனின் சாதனை நேரில் காண மகிழ்ச்சியுடன் அணி வீரர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

இச்சாதனை குறித்து முரளிதரன் கூறிய போது ,டெஸ்ட் கிரிக் கெட்டில் 700 விக்கெற்றுக்கள் வீழ்த்தியமை மிகவும் சந்தோஷமாக இருப்பதாகத் தெரிவித்தார். தான் எதிர்வரும் 2011ஆம் ஆண்டு உல கக் கிண்ண கிரிக்கெட் தொடர் வரை அதாவது குறைந் தது 4 வருடங்கள் விளையாடுவேன் எனவும் குறிப்பிட் டார்.

இவ்வாறு தான் விளையாடும்போது குறைந்தது 40-50 டெஸ்ட் போட்டிகளில் விளையாடினால் ஆயிரம் விக்கெற்று க்களை வீழ்த்துவதற்கும் ஆச்சரியமில்லை எனக் குறிப்பிட்டார். எது எவ்வாறாயினும் முத்தையா முரளிதரன் உல கின் சிறந்த பந்துவீச்சாளர் என்பதுடன் முறியடிக்க முடியாத ஆயிரம் விக்கெற்றுக்கள் என்ற சாதனையை நிகழ்த்துவார். (அ)

## 500 விக்கெற்றுக்களை தாண்டிய முதல் 4 வீரர்களும் வருமாறு

| பெயர் | அணி | போட்டிகள் | வீசிய பந்துகள் | ஓட்டங்கள் | விக்கெற்றுக்கள் | சராசரி | சிறந்த பெறுபேறு | இன்னிங்ஸில் 5 விக்கெற் | விக்கெற் 10போட்டியில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஷேன்வோர்ன் | ஆஸி . | 145 | 40705 | 17995 | 708 | 25.41 | 8-71 | 37 | 10 |
| முத்தையா முரளி | இங். | 113 | 37382 | 14931 | 700 | 21.33 | 9-51 | 60 | 20 |
| கிளேன் மெக்ராத் | ஆஸி. | 124 | 29248 | 12186 | 563 | 21.64 | 8-24 | 24 | 03 |
| அனில் கும்ளே | இந் . | 115 | 35840 | 15779 | 552 | 28.58 | 10-74 | 33 | 08 |

| வீரர் | 5விக்கெற் இன்னிங்ஸ் | போட்டிகள் | ஆஸி | தென் ஆபி. | இங். | நியூ. | இந் | மேற். இந் | பாக். | இல. | சிம் | பங் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முத்தையா முரளி | 60 | 113 | 5 | 11 | 6 | 5 | 4 | 8 | 5 | - | 6 | 10 |
| ஷேன்வோர்ன் | 37 | 145 | - | 7 | 11 | 3 | 1 | 3 | 6 | 5 | - | 1 |
| றிச்சட் ஹாட்லி | 36 | 86 | 14 | - | 8 | - | 4 | 4 | 4 | 4 | - | - |
| அனில் கும்ளே | 33 | 115 | 9 | 3 | 4 | 3 | - | 4 | 4 | 4 | - | 0 |

# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ.இல: 636 / மணநீக்கம்

சீலன் பெண் குஷேந்தினி
மறுநாமம்
கதிர்காமத்தம்பி மகள் குஷேந்தினி
225,கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
வழக்காளி

எதிர்
நவரத்தினம் சீலன்
மே/பா தங்கமணி தங்கேஸ்வரன்
தக்குச்சம்பாதி
துன்னாலை மேற்கு.
கரவெட்டி.
–எதிராளி

இவ் வழக்கு 2006-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் , வழக்காளி சார்பில் சட்டத்தரணி சபா ரவீந்திரன் அவர்களும் பிரசன்னமாயிருக்க, எதிராளி சமுகமின்றி ,எதிராளிக்கு 'வலம்புரி' தினசரிப் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி அழைப்புக் கட்டளை பதில் சேவகம் செய்யப்பட்டும், எதிராளி சமுகமளிக்கத் தவறியமையால் இவ்வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு, வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு சபா ரவீந்திரன் அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி, மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது , 'வ-1', 'வ-1-அ' மற்றும் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகிய வற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 2004ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளியை விட்டுப் பிரிந்து திருமணவன்ம உறவுறுப்புச் செய்தார் என்ற குற்றத்திற்காக ரத்துச் செய்து வெற்றும் வெறிது மானதெனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது. இப்பின்னுறு தித் தீர்வை முற்றான தீர்வையானபின் வழக்காளி தனது கன்னிப் பெயரான கதிர்காமத்தம்பி மகள் குஷேந்தினி என்ற பெயரைப் பாவித்து வரலாம் என்றும் , ஒரு கன்னிப் பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்க லாம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்காளி செலவுப் பட்டி யலை பதிவாளரிடம் சமர்ப்பித்து , பதிவாளர் வரியீடு செய்து வரும் தொகையை இவ்வழக்கின் வழக்குச் செலவாக எதிராளி, வழக் காளிக்குச் செலுத்த வேண்டுமென்றும் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி 'வலம்புரி' தினசரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாத காலத்துள் எதிராளி எதுவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்காவிடில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

*2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் திகதி*

வரைந்தது:
சபா ரவீந்திரன்
வழக்காளியின் சட்டத்தரணி

இ.த. விக்கினராஜா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

நீதிமன்ற கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(C/222)

# இன்று ஒரு தகவல்

## அடம்பிடிக்கும் குழந்தைகள்

"என் குழந்தை அடம் பிடிக்கிறான் சார்... என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை" என்று கவலைப்பட்டார் ஒரு தகப்பனார்.

"என்ன செய்வது?... அப்பாவின் குணம் கொஞ்சமாவது பிள்ளைக்கு இருக்கத்தானே செய்யும்!" என் றேன் நான்.

"அட... போங்கசார்... அவனை அடக்குவதற்கு ஏதாவது வழிசொல்வீர்களே என்று பார்த்தால் நீங்கள் என்னுடைய சரித்திரத்தைப் புரட்ட ஆரம்பிக்கிறீர்களே"... என்றார் அவர்.

"சரி... பையன் அடம்பிடித்தால் அவனை நீங்கள் எப்படி அடக்குகிறீர்கள்... அதைச் சொல்லுங்கள் முதலிலே..." என்றேன்.

"வேறு என்ன செய்வேன்... மிரட்டுவேன்... அடிப்பேன்.. அவ்வளவுதான்" என்றார். "அடித்தால் அடங்கி விடுவானா?..." என்றேன். "எப்படி அடங்குவான் மேலும் தீவிரமாக அடம்பிடிக்க ஆரம்பித்துவிடுவான்... கத்தி ரகளை பண்ணுவான்..." என்றார்.

குழந்தை அடம்பிடிக்கிறானே என்ற கவலை பல குடும்பங்களிலே உள்ள ஒரு பிரச்சினை தான். இதற்கு இப்பொழுது மருத்துவர்கள் ஒரு சுலபமான வழியைச் சொல்கிறார்கள்...

ஒரு குழந்தை அடம்பிடித்தால் அதை அடிக்கக் கூடாதாம்... அதற்குப் பதிலாக வேறு ஒரு காரியம் செய்யலாமாம்... குடும்பத்திலே உள்ள எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்தக் குழந்தையுடன் கொஞ்சநேரம் பேசாமல் இருக்க வேண்டுமாம்!

குழந்தையாலே பேசாமல் இருக்க முடியாது... தன்னுடைய தவறை உணர்ந்து அது வருந்த ஆரம்பிக்கும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் குழந்தை கொஞ்ச நாளிலே அடம்பிடிப்பதை நிறுத்திவிடும்...

அதேமாதிரி... சில குழந்தைகள்... சரியான காரணம் இல்லாமல்... அடம்பிடிக்க வேண்டும் என்பதற்காகவே கத்திக் கொண்டிருக்கும்... அதை நிறுத்து வதற்குக்கூட ஒரு வழி இருக்கிறது...

அந்த வழி என்ன தெரியுமா? குழந்தை அடம் பிடித்து அழும் நேரத்திலே அந்தச் சத்தத்தை ஒரு "டேப்ரிகார்டர்" மூலமாக பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்... குழந்தை கத்த ஆரம்பித்தால்... உடனே ஏற்கெனவே பதிவு செய்து வைத்திருக்கிற அழுகைச் சத்தத்தைப் போட்டு... அது அந்தக் குழந்தை காதிலே விழுகிற மாதிரிச் செய்ய வேண்டும்...

டேப்ரிகார்டரில் பதிவு செய்யப்பட்ட தனது அழுகைச் சத்தத்தைக் கேட்க ஆரம்பித்ததும் குழந்தை தன்னுடைய அழுகையை நிறுத்திக்கொள்ளும். சில குழந்தைகள் சாப்பிடமாட்டேன் என்று அடம்பிடிக்கும். வளர்ந்த குழந்தையை மேலும் வற்புறுத்திச் சாப்பிடச் சொல்லக்கூடாது.

சில பேர் கட்டாயப்படுத்திச் சாப்பாட்டைத் திணிப்பார்கள். அது தப்பு. குழந்தைக்கு விபரம் தெரிந்தபின், சாப்பாட்டு விஷயத்தில் நீங்கள் தலையிட வேண்டிய அவசியமே இல்லை! பசித்தால் சாப்பிட வேண்டுமென்பது குழந்தைக்குத் தெரியும்...

அதனாலே... அது தானாகவே சுதந்திரமாக எடுத்துப் போட்டுச் சாப்பிட அனுமதிக்க வேண்டும். சாப்பாடு, சாப்பிடு என்று வற்புறுத்தக்கூடாது...

நீங்கள் குழந்தையை வற்புறுத்தாமல் இருந்தால்... அது உங்களை வித்தியாசமாகப் பார்க்க ஆரம்பிக்கும்... உண்மையிலேயே பசி இருந்தால்... தனக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவை எடுத்துப் போட்டு அந்தக் குழந்தை சாப்பிடும்.

எந்தப் பிரச்சினையும் இருக்காது! இது மாதிரி சில நுட்பங்களை மனதிலே வைத்துக்கொண்டால் வீட்டிலே குழந்தைகளாலே எந்தப் பிரச்சினையும் இருக்காது.

இந்தக் காலத்துப் பையன் ஒருத்தன் ரொம்பக் கவலையோடு வந்தான். "என்ன விஷயம்?" என்று விசாரித்தேன்.

"எங்கப்பா என்னிடம் ஒரு மாதம் உன்னுடன் பேச மாட்டேன்... போ... என்று சபதம் போட்டுவிட்டார்" என்றான்.

"அதற்காகவா கவலைப்படுகிறாய்? என்று அவனிடம் கேட்டேன். "இல்லை... அந்த ஒரு மாதக் கெடு இன்றுடன் முடிவடைகிறது. அதற்காகத்தான் கவலைப்படுகிறேன்" என்றான் பையன்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எரிச்சலடையும் குடல்

## மருத்துவ விளக்கம்

*கேள்வி:-* எனக்கு வயிற்றில் நீண்ட நாட்களாக பிரச்சினையாக இருக்கிறது. தினமும் பல தடவைகள் மலம் கழிக்க வேண்டியுள்ளது. முக்கியமாக காலை உணவு சாப்பிட்டு 5-10 நிமிடங்களில் வயிற்றில் வலியும் நோவும் ஏற்பட்டு மலம் வெளியேறுகிறது. வயிற்றில் வாய்வு இரைச் சல் சத்தமும் கேட்பதுண்டு.



பெருங்குடலின் இரு தோற்றங்கள்

இரவில் படுத்த பின் மலம்கழிக்கஎழுவதில்லை. மலம் இறுக் கமாகப் போவதுகுறைவு. சில வேளைகளில் சளி போலப் போவதும் உண்டு. உடல் சோர் வாக இருக்கிறது. எனது வயது 32. பல வைத்தியர் களிடம் காட்டி மருந்து எடுத்துக் குடித்தேன். குண மாகவில்லை. இது என்னநோய்? இதைக் குணப் படுத்த முடியுமா?

*பதில்:-* உங்களுக்கு வந்திருப்பது (Irritable bowel syndrome) என எண்ணுகிறேன். எரிச்சல் படும் உணவுத் தொகுதியின் அறி குறிகள் என நாம் விளங்கிக் கொள்ளலாம். அதா வது மற்றவர்களுக்கு எதுவும் செய்யாத உணவுப் பொருட்கள்கூட இத்தகை யோரின் உணவுத் தொகுதியை உறுத்தி சில வகையான நோய் அறிகுறிகளை ஏற்படுத்துகிறது எனக் கருதலாம். இது முக்கியமாக பெருங்குடல் சம்பந்தப்பட்ட நோயாகும்.

### நோயின் தன்மை

இது மிகவும் பரவலான ஒரு நோயாகும். ஒரு சமூகத்தில் 20 சதவீதத்தினர் இந்நோயால் பீடிக்கப்பட்டிருக்கக்கூடும் என ஆய்வுகள் கூறுகின்றன. அறி குறிகள் தொடர்ந்து நீடிப்பதாலும். அதே சமயம் நாளாந்த வாழ்க்கையை அதிகம் பாதிக்காததாலும் பெரும்பாலானவர்கள் மருத்துவ ஆலோசனை பெறுவது குறைவு. இது பரவலாகக் காணப்படுகிற நோய் என்ற போதும், மிகவும் குறைவாகவே விளங்கிக்கொள்ளப்பட்ட நோயாகவும் இருக்கிறது.

இந்நோய் உள்ளவர்களின் உணவுக் கால்வாய் ஊறுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாதது எனக் கூறினோம் அல்லவா? இதனை ஒரு சிறு பரிசோதனை மூலம் நிறுவியும் உள்ளனர். ஒரு சிறு பலூனை குதத்திற்குள் வைத்துக் காற்றைச் செலுத்திய போது, இந்நோயுள்ளவர்களால் அந்த வலியைப் பொறுத் துக் கொள்ள முடியவில்லை. அத் துடன் பலூனை ஊதியதால் ஏற்பட்ட வலி அந்த இடத்தில் மட்டும் கட்டுப் பட்டு நிற்காமல் வயிறு முழுவதும் பரவியும் காணப் பட்டது. ஆனால் இவர்கள் உடலின் ஏனைய பகுதிகளில் ஏற்படும் வலியைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் அல்லர் என்பதும் கவனிக்கத்தக்கது. இந் நோயுள்ளவர்களின் உணவுத் தொகுதி சிலவகை உணவு கள், மருந்துகள், உளவியல் தாக்கங்கள் போன்றவற்றுக்கு அதீதமாகச் செயற்படுவதும் அவ தானிக்கப்பட்டுள்ளது.

எரிச்சலடையும் குடல் நோய் இளவயதிலேயே -20 முதல் 30 வயதுக்குள்ளேயே -ஆரம்பித்து விடும். மேலை நாடுகளில் பெரும்பாலும் பெண்களே இந் நோயுடன் வைத்தியரை அணுகு கிறார்கள். ஆனால் ஆசிய நாடுகளில் ஆண் களே பெரும்பாலும் வைத்தியரை நாடுகிறார்கள்.

### அறிகுறிகள்

இந்த நோயின் முக்கிய அறிகுறி நீங்கள் குறிப்பிட்டது தான். அதாவது உணவு உண்டபின் வயிற்றில் வலி ஏற்படுவதும், மலம் வெளியேறியதும் வலி தணிவதும் தான். இது பெரும்பா லும் காலையில் ஏற்பட்டாலும் எந்த வேளையிலும் ஏற்படலாம். வயிற்றில் வலி அடிவயிற்றின் இடது அல்லது வலது பக்கத்தில் ஏற்படுகின்றது. வயிற்றை முறுக்குவது போன்ற கடும் வலி சிலருக்கு ஏற்படும். ஆனால் மற்றவர்களுக்கு பரவலான கடுமையற்ற வலி தோன்றலாம். வயிறு எரிவது, வயிறு ஊதுவது போன்ற அசௌகரியங்கள் வேறு சிலருக்குத் தோன்றுவதுண்டு. வலி எத்தகையதாக இருந்தாலும் மலம் வெளியேறியதும் தணிவதுதான் இதன் முக்கிய குணாம்சமாகும்.

மலம் பெரும்பாலும் இளக்கமாக வெளியேறக்கூடும். ஆனால் வேறு சிலருக்கு சில நாட்களில் இளக்கமாகவும், வேறு நாட்களில் இறுக்கமாகவும் வெளியேறுவது உண்டு. மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் அடக்க முடியாமல் இருப்பதும் வயிற்றில் பலத்த இரைச்சலை ஏற்படுத்துவதும், வாய்வுடன் வெடித்துக்கொண்டு வெளியேறுவதும் இன்னும் சிலரது அனுபவங்களாகும். இவற்றுக்குக் காரணம் குடல் வேகமாக வேலைசெய்து விறைப்படைவதே. இதை Sastic Colon என்பர் வயிற்று ஊதல், வயிற்றுப் பொருமல், வாய்வு ஆகியவை அதிகமாக இருப்பதால் இறுக் கமான ஆடைகளையும். இறுக்கமான இடுப்புப் பட்டிகளையும் அணிவது இவர்களுக்குச் சிரமமாக இருக்கும். உணவுக் கால்வாயோடு சம்பந்தப்படாத வேறு சில அறி குறிகளும் IBS நோயாளர்களுக்குச் சில வேளைகளில் இருப்பதுண்டு. உதாரணம்: அடிக்கடி சிறுநீர் கழித்தல், மாத விடாய்க் குத்து. உடல் உறவுச்சிக்கல்கள் போன்றன. உடலுறவு கொள் வது சில பெண்களில் இந்நோயின் தீவிரத்தை அதிகரிக்கலாம் எனவும், மாதவிடாயின் போதும் தீவிரமாகலாம் எனவும் சில அண்மைய ஆய்வுகள் (Digestion- Sept 2000) சொல்கின்றன.

கேள்வி கேட்டவர் இரவில் தனக்கு மலம் கழிக்க நேர்வதில்லை என எழுதியிருந்தார். இது அவருக்குள்ளது எரிச்சலடையும் குடல்நோய்தான் என ஓரளவு உறுதிப்படுத்துகிறது. மலத்தோடு இரத்தம் வெளியேறாமை, காய்ச்சல் இன்மை, நோய் இள வயதிலேயே ஆரம்பித்து விட்டமை போன்ற குணங்கள் அவருக்கு வேறு ஆபத்தானநோய்கள் மறைந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்கின்றன.

### பரிசோதனைகள்

ஆய்வுகூடப் பரிசோதனைகள் பெருமளவில் நோயை இனங்காண உதவ மாட்டா. ஆயினும் சில அடிப்படைப் பரிசோதனைகளைச் செய்து வேறு நோய்கள் காரணமல்ல என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இதுஒரு ஆபத்தான நோய் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். புற்று நோயாக இருக்குமோ அல்லது வேறு ஏதாவது ஆபத்தான நோயாக இருக்குமோ என்ற பயமும் பதற்றமும் நோயை இன்னும் மோசமாக்கும். எனவே ஒரு நல்ல வைத்தியரிடம் காட்டி உங்களுக்கு உள்ளது IBS தான் என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். எக்ஸ்ரே, பேரியம் பால் கொடுத்து எடுக்கப்படும் எக்ஸ்ரே, கொலொனஸ் கோப்பி எனப்படும் பெருங்குடலின் முழுவதையும் சோதிக்கும் அக நோக்கி பரிசோதனை, தைரொயிட் சுரப்பி பரிசோதனை போன்றவையும் தேவைப்படலாம்.

### உணவுமுறை மாற்றம்

சில உணவு முறை மாற்றங்கள் இந்நோயாளருக்கு உதவக்கூடும். லக்டோஸ், பிரக்கோஸ், சுக்ரோஸ் போன்றவை சேர்ந்த உணவுகள் இவர்களுக்கு சமிபாடு அடைவது குறைவாதலால் அவற்றைத் தவிர்ப்பது நல்லது. உதாரணமாகச் சிலருக்கு பாலும் பால் சார்ந்த உணவுகளையும் தவிர்ப்பது நல்ல பலனைக் கொடுக்கக்கூடும். இதற்குக் காரணம் பாலில் Lactose இருப்பதே. பழங்களில் Fructose இருப்பதால் பழவகைகளையும் தவிர்ப்பது வேறு சிலருக்கு உதவக்கூடும். நார்ப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகளை உணவில் சேர்ப்பதும் நிச்சயம் உதவும். கீரை வகைகளிலும் காய்கறி வகைகளிலும் அதிக நார்ப்பொருள் இருக்கிறது. அவற்றைத் தினமும் உணவில் சேருங்கள். இப்படியான உணவு முறை மாற்றங்கள் உங்களுக்கு நிறையச் சுகத்தைக் கொடுக்கும்.

### மருந்துகள்

மருந்துகளைப் பொறுத்தவரையில் இந்நோயை முற்றாகக் குணப்படுத்த முடியாது. ஆயினும் நோயின் அறிகுறிகளைத் தணிப்பதற்கு வயிற்றோட்டத்தைத் தணிக்கும் மாத்திரைகள் (Antidiarrhoeal drugs-eg Loperamide) வயிற்று வலியைத் தணிக்கும் மாத்திரைகள் (Antispasmodic dr ugs) மற்றும் மனச்சோர்வு தணிக்கும் மாத்திரைகள் (Tricyclic antidepressants) ஆகியன உதவும். உங்களது வைத்தியரின் ஆலோசனையுடன் உங்களுக்கு அவசியமானதை உட்கொள்ளுங்கள். நிச்சயம் குணம் கிடைக்கும். இது பெருமளவு மனம் சம்பந்தப்பட்ட நோயேயாகும். புற்றுநோய் போன்ற ஆபத்தான நோய்கள் கிடையாது. சத்திர சிகிச்சை தேவைப்படாது போன்ற நம்பிக்கைகள் உங்கள் நோயைக் குணமாக்கிவிடும். மன அடக்கப் பயிற்சிகள், தியானம், யோகாசனம், போன்றவையும் உதவக்கூடும்.

நன்றி: நீங்கள் நலமாக நலவியல் நூல்

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

# இராசி பலன்

*17.07.2007*

*(ஆ[illegible] 01, செவ்வாய்க்கிழமை)*

*திருதியை மாலை 05.53 மணிவரை*

*மகம் முழுவதும்*

*இராகுகாலம் 03.00 – 04.30 மணிவரை*

*சுபநேரம் 10.30 – 12.00 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | குடும்பக்கவலை, பணக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், உடல்நலக்குறைவு. |
| இடபம் | புதிய விடயம், திடீர்நன்மை, மனச்சோர்வு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, இனிய சம்பவம், பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை. |
| கடகம் | விவாதம், முயற்சி தாமதம், சிந்தனை மிகுதி, அதிக செலவு. |
| சிங்கம் | சயனசுகம், போசனசுகம், தெய்வ சிந்தை, வெகுமானம். |
| கன்னி | பிரயாண அலைச்சல், உணர்ச்சிவசப்படல், பணவிரயம், சோம்பல் நிலை. |
| துலாம் | மனமகிழ்ச்சி, பிறருக்கு உதவுதல், நல்ல தகவல், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | கடின முயற்சி, சுபநிகழ்ச்சி, பொருள் சேர்க்கை, ஆரோக்கியம். |
| தனுசு | எதிர்பாராத செலவு, புதிய திட்டமிடல், அச்சமான நிலை, உடல்உழைப்பு. |
| மகரம் | அதிஷ்டக்குறைவு, வீண் தொல்லை, போசன சுகம், தர்மம். |
| கும்பம் | நல்ல வரவேற்பு, வாகனசுகம், பணவருவாய், அபூர்வ சந்திப்பு. |
| மீனம் | சுகவாழ்வு, திடீர் பயணம், தொழில் நன்மை, சத்துரு ஜெயம். |

- வளவன்

அயலானுடைய கால் ஒடிந்த பிறகுதான் மிக நன்றாக நடக்கலாம் என்று பொறாமைக்காரன் நினைக்கின்றான்.

-டென்மார்க்

வலம்புரி

# உள்ளொரு செயலும் புறமொரு வார்த்தையும்

இலங்கை இனவிவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? என்பதுபற்றி தெளிவின்மைகள் நிலவினாலும் இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு யுத்த உதவிகளை வழங்கி வருவது போன்ற தோற்றப்பாடு இருப்பதை முழுமையாக மறுப்பதற்கில்லை.

கட்டுநாயக்க விமானத் தளத்தின் மீதான விடுதலைப்புலிகளின் வான்தாக்குதலையடுத்து இந்திய அரசு தமிழகக் கடலோரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது.

நவீன ராடர் கருவிகளைப் பொருத்துவது முதல் யுத்தக் கப்பல்களின் தொடர் ரோந்து என அந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பட்டியல் படுத்தப்பட்டன.

விடுதலைப்புலிகளின் வான்படையால் இந்தியாவுக்கு எதுவித அச்சுறுத்தலும் இல்லை என அந்த அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாகக் கூறியிருந்தார்.

எனினும் இந்தியாவின் கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரண காரியமின்றி அதிதீவிரப்படுத்தப்பட்டன.

விடுதலைப்புலிகளின் வான்படையால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் - பேரழிவு போன்ற காட்சிப்படுத்தலை அந்நாடு முன்னிலைப்படுத்தியமை எதற்காக என்பது தெரியாத - தெளிவில்லாத விடயமாக இருந்தபோதிலும், இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் கே.ஆர். நாராயணன் சர்ச்சைக்குரிய ஒரு கருத்தை முன்வைத்தார்.

அதாவது இலங்க்கை தனக்குத் தேவையான ஆயுதங்களை இந்தியாவிடமே பெற்றுக் கொள்ளவேண்டும். வேறு நாடுகளிடம் ஆயுதக் கொள்வனவு செய்வதை இந்தியா சகித்துக் கொள்ளாது.

பிராந்திய வல்லரசான இந்தியா, இலங்கைக்குத் தற்காப்பு நடவடிக்கைக்கான ஆயுதங்களையே வழங்கும் எனக் கூறியிருந்தார்.

கே.ஆர்.நாராயணனின் மேற்போந்த கருத்துத் தென்பகுதியில் பேரினவாதக் கட்சிகளிடையே பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. எனினும் அதுகுறித்து இலங்கை அரசு அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா நடுநிலைப் போக்குடன் நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்ளும்பொருட்டே கே.ஆர்.நாராயணன் மேற்போந்தவாறு கூறியிருக்கலாம் என்ற சந்தேகம் கருக்கட்டுவது நியாயமானதே.

இலங்கை விடயத்தில் இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் என தமிழக முதல்வர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதிய கடிதம், அதன் வழி பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதம் என்பன இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா அக்கறை கொண்டுள்ளதுபோல் காட்டுவதாக அமைந்திருந்தன.

அதனை மேலும் வலுப்படுத்தும் முகமாகவும் இலங்கைக்கான இந்தியாவின் ஆயுத உதவிகளை மூடிமறைத்து தமிழக அரசியல் தலைவர்களின் எதிர்ப்பலைக்கு அணைகட்டும் வகையிலுமே கே.ஆர்.நாராயணன் நடந்து கொண்டார் என எண்ணத் தோன்றுகின்றது.

இந்த எண்ணப்பாடு எழுந்தமானதல்ல. ஏனெனில் இலங்கைக்குத் தற்காப்பு நடவடிக்கைக்கான ஆயுதங்களை மட்டுமே வழங்க முடியும் என கே.ஆர்.நாராயணன் கூறிய அதேநேரம் இந்தியாவிலிருந்து ஏகப்பட்ட- நவீன ஆயுதங்கள் இலங்கைக்கு வந்து சேர்ந்தன.

இந்த ஆயுதங்களின் வருகையோடு கிழக்கில் தொப்பிக்கல மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. ஆக, இந்தியா உள்ளொன்று செய்து புறமொன்று கூறுகின்றது என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றதல்லவா?

# மாணவர்களின் விடுதலைக்கு உதவியோருக்கு தமிழ் மாணவர் ஒன்றியம் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மே மாதம் கடத்தப்பட்ட மாணவர்கள் மூவரும் விடுவிக்க உதவியோருக்கு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மே மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு பின் இரண்டு மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட சு.யசோதரன், நா.வேணுகானன், கு.கண்ணன் ஆகிய மாணவர்களின் விடுதலைக்காக உதவிய, போராடிய அனைவருக்கும் மாணவர் சமூகம் நன்றி கடைப்பாடுடையது என்பதோடு படைத்தரப்பு மாணவர்கள் மீதான அச்சுறுத்தல்களை முடிபுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதனையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

குடாநாட்டு கல்விச் சமூகத்தின் மீதான அச்சுறுத்தல்களைப் படையினர் நிறுத்தியாக வேண்டும் என வேண்டுகின்றோம். மேற்படி மாணவர்களின் விடுதலைக்காகப் போராடிய பாடசாலைச் சமூகத்தினர், உயர் கல்விச் சமூகத்தினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவருக்குமான எமது நன்றியைத் தெரிவிப்பதோடு உறுதுணையாக நின்ற மதப்பெரியார், இராஜதந்திரிகள் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பிரதேச செய்தியாளர்களிடமிருந்து மக்கள் சேவை ஊடகவிருதுக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

ஊடகத்துக்குள் மக்கள் சேவை செயற்பாட்டை அதிகரிக்கும் நோக்குடன் கடந்த வருடம் ஆரம்பித்த மக்கள் சேவைக்கான விருது வழங்கும் விழாவை இவ் வருடமும் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் சேவை ஊடக அமைப்பு அறிவித்துள்ளது.

விஷேடமாக பிரதேச செய்தியாளர்களுக்காக இந்நாட்டில் நடாத்தப்படும் ஒரே விருது வழங்கும் விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆலோசனையின் கீழ் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அனுசரணையுடன் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை தமிழ் பத்திரிகையாளர் ஒன்றியம், சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆகியன இணைந்து இவ்விழாவினை ஒழுங்கு செய்துள்ளன.

இம்முறையும் மாகாண மட்டத்தில் விருது வழங்கும் விழாவை நடாத்தி தேசிய விருது வழங்கும் விழாவை டிசம்பர் மாதம் கொழும்பில் நடாத்தவும் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளோம்.

மக்கள் சேவை ஊடாக செயற்பாட்டுக்கு மேலாக இம்முறை சகிப்புத் தன்மைக்கான விருதுக்கும் பிரதேச செய்தியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.மக்கள் சேவை ஊடக விருதுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2007 ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆகும்.

விருதுக்காக 2006 செப்டெம்பர் முதலாம் திகதிமுதல் 2007 ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி வரை அச்சு, வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களில் வெளியான ஒலி , ஒளி பரப்பப்பட்ட தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளிலான செய்திகள், கட்டுரைகள் நிகழ்ச்சிகளாக இருக்க வேண்டும்:

ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் விண்ணப்பிப்போர் மத்தியில் மக்கள் சேவை, சகிப்புத்தன்மை ஆகியவற்றுக்காக 10 பேர் மாகாண நடுவர் குழுவினரால் தெரிவு செய்யப்படுவர். இறுதியாக வெற்றியாளர்கள் ஐந்து ஊடக அமைப்புகள் தெரிவு செய்யும் ஒரு குழுவினரால் தெரிவு செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பண்பாட்டியியல் கற்கையில் முதுகலைமாணி பட்டம் பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பண்பாட்டியியல் முதுகலைமாணி (எம்.ஏ) பட்டப்படிப்பில் சித்தியடைந்தோரின் பெயர் விபரங்கள் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு, செல்வி.எம். அப்புத்துரை, திருமதி ஜெ.அருள்மயம், திருமதி ஏ.ஜெயகுமார், செல்வி.பி.கந்தசாமி, என்.காசிவேந்தன்,என்.மனோரஞ்சிதம், திருமதி வி.நாகேந்திரா, திருமதி கே.பசுபதீஸ்வரன், திருமதி எஸ்.சுகுணன், செல்வி. எஸ்.சேனாதிராஜா, ரி.தேவானந், திருமதி எம்.வி.பத்மதயாளன், என்.விஜயசுந்தரம், எம்.தயாகுமாரன். (ச)

# க.பொ.த. (உ/த) பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலகங்களையும் கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் வலயம் II ற்கு உட்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை 2007 பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் தவறாது சமூகமளிக்கும்படி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த.(உ/த) பரீட்சை 2007 தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளைக் காலை 8.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய்க் கோட்டப் பரீட்சை நிலையங்கள் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம்,தென்மராட்சி வலயப் பாடசாலைப் பரீட்சை நிலையங்களில் கடமையாற்றவுள்ள இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்களைத் தவறாது சமுகம் தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (அ)

# பொருளியல் பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2007 க.பொ.த.உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொருளியல் பாடம் தொடர்பான கருத்தரங்கு நாளை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பல்லூடக எறிகருவியின் உதவியுடன் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரை வழங்கவுள்ளார். (அ)

# ஐ.தே.க. அமைக்கும் கூட்டணிக்கு இ.தொ.கா., மு.கா.ஆதரவு!

பதவியிலுள்ள அரசாங்கத்தைக் கவிழ்த்துப் புதிய ஆட்சியை மலரச்செய்யும் வகையில் பொதுக்கூட்டணி அமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முழுமையான ஆதரவினை வழங்கும் என்று நம்புகின்றோம்.

அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். அரசாங்கத்திலுள்ள முக்கிய அமைச்சர்கள் பலர் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளனர். இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தில் நம்பிக்கையிழந்து விரக்தியிலிருக்கும் அமைச்சர்களே இவ்வாறு எம்முடன் இணையவுள்ளனர் என்றும் அவர் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கி வரும் பொதுக் கூட்டணியின் செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது, இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று மக்கள் கூற ஆரம்பித்துவிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்று மக்கள் கருதுகின்றனர். எனவே நாட்டுக்கும் மக்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு எமது கட்சி தயாராகிவிட்டது.

அதன்படி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக நாங்கள் பரந்துபட்ட வகையில் பொதுக் கூட்டணி ஒன்றை அமைத்து வருகின்றோம். அது தொடர்பாக பல கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி எமது கட்சி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளவுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடாத்த எதிர்பார்க்கின்றோம். அந்தக் கட்சிகள் எமது முயற்சிக்கு முழுமையான ஆதரவினை வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார். (ச-5)

# நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் அவரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 13 ஆம் திகதியுடன் நிறைவுபெறும் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான பூர்வாங்க ஆலோசனைகளே இக் கருத்தரங்கில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ்.மாநகர சபையின் திணைக்களத் தலைவர்கள், இலங்கை மின்சார சபைப் பிரதிநிதிகள், வட பிராந்திய போக்குவரத்துச் சபை, தொண்டர் ஸ்தாபனங்கள், சிற்றூர்தி போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் நல்லூர் ஆலய அறங்காவலர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# புளியங்குளம் மருத்துவமனை அழிவுகளை கண்காணிப்புக்குழு பார்வையிட்டது

(வவுனியா)

இராணுவத்தின் எறிகணை வீச்சில் பேரழிவுக்குள்ளான புளியங்குளம் மருத்துவமனை பகுதியை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் குழுவினரும் நேற்றுப் பார்வையிட்டனர்.

புளியங்குளம் மருத்துவமனை மீது கடந்த சனிக்கிழமை அன்று இராணுவத்தினரின் செறிவான எறிகணைத் தாக்குதலில் அதன் கட்டடம் பலத்த சேதமடைந்திருந்தது.

இந் நிலையில் வவுனியாவில் இருந்து நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரும் புளியங்குளத்துக்குச் சென்று அழிவுகள் மற்றும் சேதங்களைப் பார்வையிட்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டத் தலைவர் கான்ஸ் மற்றும் கண்காணிப்பாளர்களான நோறி, போல் ஆகியோர் புளியங்குளத்திற்குச் சென்றிருந்தனர்.

செஞ்சிலுவைக் குழுவின் அதிகாரி கால்கான் புளியங்குளத்துக்குச் சென்று மருத்துவமனைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டு அதனைப் பதிவு செய்தார். (எ-5)

# வட மாகாண வைத்தியசாலைகளில் பணிபுரியும் 74 தமிழ்மொழி மூல தாதிமார் இன்று நியமனம்

(கொழும்பு)

வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் தாதிமார் பற்றாக் குறையை நீக்கும் நோக்கில் தமிழ் மொழி மூல தாதிமார் 74 பேர் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இன்று காலை நடைபெறவுள்ள வைபவத்தில் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாடெங்கிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 2003 பி குழுவைச் சேர்ந்த ஆயிரத்து 76 தாதியருக்கான நியமனக் கடிதங்கள் இன்று தேசிய இளைஞர் மன்றத்தில் நடைபெறும் வைபவத்தின்போது வழங்கப்படும்.

இவ் வைபவத்திலேயே தமிழ்மொழி மூல தாதியர்களுக்கும் நியமனம் வழங்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (ச-5)

## இந்து கலாசார அமைச்சுப்...

இறுதிக்கிரியைகள் ஞாயிறன்று பண்டாரிக்குளத்தில் நடைபெற்றது.

இறந்தவரின் உறவினராகிய இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் இந்த மரண வீட்டுக்குச் சென்று விட்டு உக்குளாங்குளத்தில் உள்ள உறவினர் ஒருவரது வீட்டுக்கு தனது அலுவலக வாகனமாகிய மஸ்டா ரக வானில் சென்றபோதே ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் ஆயுத முனையில் வாகனம் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு ஆயுதபாணிகள் வாகனத்தை நிறுத்தி வாகனத்தில் இருப்பவர்கள் சிங்களவர்களா? தமிழர்களா? என விசாரணை செய்துள்ளனர். பின்னர் வானில் இருந்தவர்களில் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியையும் பறித்துக்கொண்டு தாங்கள் தொடர்பு கொள்ளும் வரையில் அவ்விடத்திலேயே வானில் வந்தவர்கள் அனைவரும் நிற்கவேண்டும் என பணித்துள்ளனர்.

அவ்வாறு நிற்காவிட்டால் சனிக்கிழமை இரவு அப்பகுதியில் நான்கு பேரை தாங்களே சுட்டுக்கொன்றதாகவும் அந்தக் கதியே இவர்களுக்கும் ஏற்படும் எனவும் அச்சுறுத்தி விட்டு சிங்களவராகிய சாரதியுடன் வாகனத்தை கடத்திச் சென்றதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வாகனத்தை கடத்திச் சென்றவர்களிடம் இருந்து தெரிவித்தபடி நீண்ட நேரத்திற்கு தகவல் எதுவும் வராத நிலையில் அவர்கள் பறித்துச் சென்ற தமது கையடக்கத் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டபோது 25 இலட்சம் ரூபா பணம் தந்தால் கடத்தப்பட்ட வாகனத்தையும் சாரதியையும் விடுதலை செய்வதாக அவர்கள் தெரிவித்ததையடுத்து வாகனம் கடத்தப்பட்டு சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின்னர் வவுனியா நகருக்குச் சென்று பொலிஸாரிடம் சம்பந்தப்பட்டவர்கள் முறையிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் ஞாயிறு இரவு 9.30 மணியளவில் தவசிக்குளத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒருவர் இறந்து கிடப்பதாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் ஊடாக பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு தகவல் கிடைத்ததையடுத்து நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அன்றிரவே சடலம் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. சடலத்தை பரிசோதனை செய்த பொலிஸார் அவரது உடைமையில் இருந்த பொருட்களைக் கொண்டு இறந்தவர் வாகனத்துடன் கடத்திச் செல்லப்பட்ட சிங்களவராகிய சாரதி உதயகுமார என அடையாளம் காணப்பட்டார்.

சடலத்தை வவுனியா வைத்தியசாலையில் நேற்றுக் காலை பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் வாகனம் கடத்திச் செல்லப்பட்டபோது அதில் இருந்த இந்து கலாசாரத் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசையும் விசாரணை செய்து நடந்தவற்றைத் தெரிந்து கொண்டார்.

இறந்தவராகிய உதயகுமார இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசனின் வானச்சாரதி என்பதும் அவருக்கு திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்று மூன்று தினங்களே ஆகியுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச-5)

## ஈழத்தமிழர்...

சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையே தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கை மேற்கொள்ள முடிபு செய்யப்பட்டுள்ளதாக வந்துள்ள தகவல் அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இலங்கை அரசு தமிழர்களைக் கொன்று குவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகளை வழங்கி வருவது தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்துகிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தமிழர்களுக்கு துரோகம் இழைக்கிறது.

எனவே இந்திய-இலங்கை கடற்படைகளுக்கு இடையே உள்ள தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மத்திய அரசு கைவிடவேண்டும். இவ்வாறு தனது கடிதத்தில் வை.கோ.குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தமிழக மீனவர்களால்...

காக இரு நாட்டுக் குழுவினரும் ஆண்டுக்கு நான்குமுறை இத்தகைய சந்திப்புக்களை மேற்கொள்கின்றனர்.

முன்னர் நடைபெற்ற இரு சந்திப்புக்கள் அனைத்துலக கடற்பரப்பில் நிறுத்தப்பட்ட கப்பல்களில் நடைபெற்றன. வட பகுதி இலங்கைக்கு தமிழக மீனவர்களின் படகுகளில் மூலமான விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கடத்துவதாக இந்தியத் தரப்பிடம் இலங்கைத் தரப்பினர் முறைப்பாடு செய்தனர். (ச-5)

## பாலமோட்டையில் மோதல்...

பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 இராணுவத்தினர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட இராணுவத்தரப்பைச் சேர்ந்தவரின் சடலம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இராணுவத்தினரிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கிகள் மூன்றும் இரவு தொலைக்காட்டி மற்றும் இராணுவத் தளபாடங்கள் வெடிபொருட்கள் ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக இளந்திரையன் தெரிவித்துள்ளார். இதேவேளை இத் தாக்குதல் சம்பவம் குறித்து தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தகவல் எதனையும் வெளியிடவில்லை. (ச-5)

## யூலை 19 இல் இலங்கையில்...

இப் போராட்டத்தின் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கும் இவ் வைபவத்தில் ஜனாதிபதி வீரவணக்கம் செலுத்தவுள்ளார்.

சகல அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனக் கட்டங்கள் மற்றும் வீடுகள் அனைத்திலும் அன்றைய தினம் தேசியக்கொடி ஏற்றி இராணுவத்தினர் பெற்ற இந்த வெற்றியை நினைவு கூருவதோடு அந்த விழாவில் பங்குகொள்ளுமாறும் நாட்டு மக்களிடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுகிறது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவினருக்கும் ஐக்கியதேசியக்கட்சிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்வரும் 19 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது. இவ் ஒப்பந்தம் அன்று முற்பகல் 11.45 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து அரசுடன் இணைந்த 11 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியினரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான வழக்கு விசாரணையும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீங்குவது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணையே அன்று நடைபெறவுள்ளது. இம் மூன்று நிகழ்வுகளும் ஒரே நாளில் இடம் பெறவுள்ளதால் அன்றைய தினம் இலங்கையில் அரசியலில் பாரிய மாற்றம் ஒன்று ஏற்படக்கூடுமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச)

## ரணில்-கருணாநிதி...

வாரத்தில் இடம்பெறவிருக்கின்ற சந்திப்பு தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க கடந்த வாரம் இந்தியாவிற்கு சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவுக்கு சென்றிருந்த ரவி கருணாநாயக்க எம்.பி.தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதியின் மகன் அமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ் நாட்டு அரசாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பில் தமிழக முதல்வர் கருணாநிதியுடன் பேச்சு நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ள விருப்பம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடியதுடன், அதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ரவிகருணாயக்க எம்.பி. முக்கியஸ்தர்களிடம் தெரிவித்திருக்கின்றார். (ச-5)

## கிழக்கு மாகாண பிரதம செயலாளர்...

புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் முதலாவது பிரதம செயலாளர் எச். எம்.ஹேரத் அபயவீர நேற்று திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணம் கடந்த ஜனவரி மாதத்தில் இரு மாகாணங்களாக பிரிக்கப்பட்டு தனித்தனியாக வடக்கு, கிழக்கு என இரு மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிழக்குமாகாணத்திற்கான முதல் தடவையாக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பிரதம செயலாளரான அபயவீரவே இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தொப்பிக்கல வெற்றியையடுத்து கிழக்கு மாகாணத்தை விடுதலைப்புலிகளிடம் இருந்து தாம் முற்றாக மீட்டு விட்டதாக அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில், அந்த மாகாண மூத்த அதிகாரி ஒருவரின் இந்தக்கொலை இடம் பெற்றிருக்கிறது.

நேற்று மாலை 5.45 மணியளவில் திருகோணமலையின் உட்துறைமுகவீதியில் இருக்கின்ற கிழக்கு மாகாண செயலக அலுவலகத்தில் அவர் இருந்தபோது அடையாளம் தெரியாத நபர்களினால் ஜன்னல் வழியாக சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலம் தற்போது திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் அந்தப் பகுதியில் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண வெற்றியை அரசு எதிர்வரும் 19 ஆம் திகதி வெகுவிமர்சையாக கொண்டாடவுள்ள நிலையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதால் அரச தரப்பில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. (ச-5)


# மரண அறிவித்தல்

## திருமதி சத்தியசீலன் சுசீலாதேவி



அளவெட்டி கும்பிழாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சத்தியசீலன் சுசீலாதேவி 15-07-2007 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சத்தியசீலனின் அன்பு மனைவியும் ,கந்தையா, தங்கரத்தினம் (அமரர்). ஆகியோரின் அன்பு மகளும்,அதிசயவனிதா (கனடா), மணிமேகலாதேவி, மல்லிகாதேவி (கனடா), மாணிக்கவாசகர் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்), ஞானாம்பிகை (பரந்தன்), கமலாதேவி (இணுவில்), சாந்தாதேவி, சிவாதேவி, சிவகுமார், சிவரூபன் (K.R), சுஜாதா, சிவதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

தகவல்
க.சிவரூபன்(தம்பி)
(ரூபன் பல்பொருள் வாணிபம்,K.R.அளவெட்டி)

(சி-223)



# பிறந்த நாளில் வாழ்த்துகிறோம்



திரு. இ. சிவஞானசுந்தரம் SLPS-I
கோட்டக் கல்விப் பணிப்பாளர்-கோப்பாய்

எங்கள் கோட்டத்தின் எஜமானாயிருந்து
அறுபதாம் வயதில் அடியெடுத்து வைக்கும்
சிவஞானசுந்தரம் ஐயா நீடு வாழி!வாழி!
விநாயகன் அருள் பெற்று விக்கினங்கள் இன்றி
வாழி!

ஆசிரியர் கழகம்,
உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

17.07.2007 (சி-224)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.